பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

# Valampuri

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 21 | ஞாயிற்றுக்கிழமை | (07.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 262

## ஸ்ரீ. சு. கட்சி-ஜே. வி. பி. கூட்டு

## தோல்வியில் முடிந்தது!



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணியை ஏற்படுத்தும் முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றில் கூட்டமைப்பதில் ஏற்பட்ட தோல்வி உறுதிப்படுத்தப்பட்டது.

இம் மாத இறுதிக்குள் இரு கட்சிகளும் கூட்டணியை ஏற்படுத்திக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டு வந்த போதிலும் அடிப்படைப் பிரச்சினைகளில் இருகட்சிகளுக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்படாமையே கடந்த 7 மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியை தழுவுவதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை ஜே.வி.பி ஏற்காததினாலேயே கூட்டமைப்பு தோல்வியில் முடிந்திருப்பதாக ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டிணைவு தோல்வியில் முடிவடைந்திருப்பது வரவேற்கத் தக்கதொரு விடயம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளதுடன் இனப்பிரச்சினைத் தீர்வில் ஜே.வி.பி கொண்டுள்ள கடும் போக்கை ஜனாதிபதி நிராகரித்திருப்பது மகிழ்ச்சியைத் தருவதாகவும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றாலும் அடுத்து வரவிருக்கும் பொதுத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்தே போட்டியிடுமென கம்பஹா மாவட்ட எம்.பியும் ஜனாதிபதியின் ஆலோசகருமான அனுராபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகளின் முகாம்

# பொ.ஐ.முன்னணி குற்றச்சாட்டு

# பிரதமர் அலுவலகம் மறுப்பு!

### யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் மறுக்கிறது

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி 13 முகாம்களை அமைத்துள்ளார்கள் என்ற பொ.ஐ.முன்னணியின் குற்றச்சாட்டை பிரதமர் அலுவலகமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளரும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.**

திருமலை மாவட்டத்திலுள்ள துறைமுகம், எண்ணெய்க் குதங்கள் மற்றும் கடற்படை முகாம் ஆகியவற்றைச் சுற்றி விடுதலைப் புலிகள் 13 இராணுவ நிலைகளை அமைத்து இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கும், பிராந்திய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளதாகப பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அபாய எச்சரிக்கை விடுத்திருந்தார்.

கலாநிதி சரத் அமுனுகமவின் எச்சரிக்கையில் எவ்வித உண்மையோ ஆதாரமோ இல்லை என பிரதமர் அலுவலகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.இவ் விடயம் தொடர்பாகப்

(10ம் பக்கம் பார்க்க)

## லொறி-சைக்கிள் விபத்தில் பாடசாலை அதிபர் மரணம்

### கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் துயரம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் இடம்பெற்ற லொறி-சைக்கிள் விபத்தில் புத்தூர் அ.த.க பாடசாலை அதிபர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.


நேற்று மாலை 7 மணியளவில் இத்துயரச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் 3ஆம் கட்டை கட்டப்பிராயைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பாடசாலை அதிபர் செ.யோகேஸ் வரன் (வயது-53) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப அதிபர் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது இவ் விபத்து இடம் பெறறுள்ளது. இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-7)

## தெல்லிப்பழை துர்க்காதேவி இன்று தேரேறி வருகிறார்

(யாழ்ப்பாணம்)



பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் இன்று மு.ப.9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் யாழ். குடாநாட்டில் இருந்து பெருந்திரளான பக்தர்கள், அம்பிகையின் தேரேறிவரும் அற்புதக் காட்சியைக் கண்டுகளிக்கக் கூடுவர்.

பக்தர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்குப் பொருத்தமான ஆடை அணிகளுடன் வருகை தந்து அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றேகுமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-12)

## யாழில் தேசிய விளையாட்டு விழா

## அரசின் கபடத்தனமான சூழ்ச்சி

### தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழு குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

இலங்கையின் 29வது தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணதத்தில் நடத்துவதற்கு மேற்கொள்ளப் பட்டுவரும் முயற்சிகள் மக்களின் உணர்ச்சிகளுக்கு மாறான ஒரு சூழ்ச்சித் திட்டமாகும்.

இவ்வாறு தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான யாத்திரை, கோயில் புனரமைப்பு இனங்களுக்கிடையிலான உறவுப்பாலங்கள் என நீளும் சூழ்ச்சிகரமான திட்டங்களின் பிந்திய வடிவமே 29வது தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளாகும்.

(10ம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் நேற்று துப்பாக்கிச் சூடு,இருவர் பலி

(கொழும்பு)

வெள்ளவத்தையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்றில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளவத்தை டபிள்யூ.ஏ.டி. சில்வா மாவத்தை சந்தியில் வெள்ளை நிற வான் ஒன்றில் பயணம் செய்த இருவரை இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் சுட்டுக் கொன்றதாக கொழும்பு தெற்குப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் எச்.என்.டி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற இனந்தெரியாத கொலையாளிகளைப் பிடிப்பதற்காக பொலிசார் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருவதுடன் தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)


# தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பு மலர் 07.09.2003

## நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட அம்பிகையை வணங்கி நிற்போம்



திருக்கோயில்களில் நடைபெறும் விழாக்களில் மஹோற்சவ விழாக்கள் மகத்துவமானது. கொடியேற்றம் தொடக்கம் கொடியிறக்கம் வரை மஹோற்சவம் நடைபெறும் நாட்களாகும். தெல்லிப்பழை துர்க்கா தேவிக்கு 28.08.2003ல் கொடியேற்றம் ஆரம்பமாகி 08.09.2003ல் இவ்வாண்டு மஹோற்சவம் நிறைவு பெறுகிறது. இவற்றுள் இரதோற்சவம் எழுச்சி மிக்க ஒரு திருநாளாகும். அம்பாள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலுக்குரியவள். இவற்றுள் அழித்தல் என்ற சங்காரத் தொழிலுக்கு உரியது தேர்த் திருவிழா நாளாகும். மேலும் ஈழத் தமிழ் மக்களின் துயர்களையும், நிரந்தர சமாதானம் இந்த மண்ணில் மலரவும், அனைவரும் தமது சொந்தக் காலில் ஊன்றி நிற்கவும் எல்லாம் வல்ல துர்க்கா தேவி அருள் புரிவாளாக என்று அம்பிகையை வாழ்த்தி வணங்கி நிற்போம்.

துர்க்கா துரந்தரி
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி





மலரமைப்பு: அனுஷன்

## அருள்மிகு சக்தியின் மகத்துவம்

*"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்*
*காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு*
*மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே*
*மாத்தவளே உனையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே"*

எனச் சக்தியின் மகிமையை விதந்து சக்தி உபாசகரான அபிராமிப்பட்டர் மிக அழகாகப் பாடியுள்ளார். இறைவனைத் தாயாக வழிபடுதலே சக்தி வழிபாடாகும். அன்பு, தூய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் ஆகியவற்றில் சிறந்தவள் தாய். தாயை அணுகக் குழந்தை ஒருபோதும் அஞ்சுவதில்லை. 'தாயுடன் சென்று பின் தந்தையைக் கூடி ஏகுமதே நிட்டை' என்பது சைவசித்தாந்த தத்துவம். அத்தகைய பெருமைமிக்க தாயினும் நல்ல தலைவியை அவளின் மகத்துவத்தை 'தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய தேர்த்திருவிழா நன்னாளில் மனங்கொள்ளல் சிறப்பானதே.

சிவன் உலகத்தோற்றத்திற்கு அடிப்படையாய் அமையும் போது சக்தி அதனை இயக்கும் தத்துவமாய் விளங்குகின்றாள். சதாசிவனுக்கு மூத்தவளாகவும், திருமாலுக்கு இளையவளாகவும், பெருந்தவத்திற் குரியவளாகவும் சக்தியானவள் காணப்படுகின்றாள். "அவளது வழிபாட்டின் அடிப்படைத்தத்துவம் எத்தகைய புரட்சிகளாலும், விஞ்ஞானப் புதுமைகளா லும் அசைக்க முடியாதது" என மகரிஷி அரவிந்தரும், சுவாமி விவேகானந்தரும் மிகவும் பொருத்தமுறக் கூறி யுள்ளனர். சக்தி என்ற ஒன்று இல்லையெனில் உலகமோ, உலகின் சுழற்றியோ, கோள்களோ, அவற் றின் இயக்கமோ, பொருள்களோ, அவற்றின் அசைவோ, இயற்கையோ, அதன் வனப்போ எதுவுமே இல்லை. சக்தி வடிவான உலகில், எமது ஆதிபரா சக்தியின் திருவிளையாடல்களைப் பஞ்சபூதங்களிலும், அணுமுதல் அண்டபகிரண்டம் வரை எங்கும் காணலாம். அவள் பல்வேறு தேவியம்சங்களைக் கொண்டு திகழ் கின்றாள். எவர் எவர் எந்தெந்த வைபவத்தை சிறப் பாக பெறவிரும்புகின்றனரோ அதற்கேற்ப தேவி அம் சத்தையும், திருநாமங்களையும் கொண்டு வெளிப் படுகின்றாள், அவள் முத்தொழிலுக்கு ஆதாரமாகும் போது பிரம்மாணி, வைணவி, உருத்திராணி எனவும் காலத்தின் வடிவினளாகும் போது காளியாகவும், உலகத்தைக் காக்கும் போது உலகநாயகியாகவும், புவனேஸ்வரியாகவும் காட்சிதருகின்றாள். அவள் ஈஸ் வரனுக்கு ஒப்பாகும் போது துர்க்கையாக விளங்கு கின்றாள்.

'எங்கும் எவையும் உமை அல்லது சக்தியின் திருவடிவங்களே' என்கிறது சூதசங்கிதை. சிவனைப் போலவே சக்திக்கும் மூர்த்தங்கள் உள்ளன அவை பதினெட்டு. தேவியின் உடற் பாகங்கள் இந்திய நாட் டின் பல்வேறு இடங்களில் விழுந்து சக்தி பீடங்கள் உருவாகின என்பது புராணங்கள் கூறும் செய்தி.

தொன்மை வாய்ந்த மதமான சாக்தம் சக்திக்குரிய மதமாகும். இராமகிருஷ்ண பரமஹம்சர் சிறந்த சக்தி உபாசகர் 'ஞாலமுற்றும் பராசக்தியின் தோற்றம்' என்று பாடியுள்ளார் மகாகவி பாரதியார். இத்தகைய கவிஞர் களையும் அறிஞர்களையும், அருளாளர்களையும், தியாகிகளையும், வீரர்களையும் உலகுக்குக் காட்டி யவள் சக்தியே!

இச் சக்தியின் வடிவபேதங்களில் துர்க்கை வடிவம் சிறப்பானது. பராசக்தியை துர்க்கை மூலமாக உபா சித்தால் பயம் விலகும். 'துர்க்கம்', என்றால் அகழி. தன்னை வழிபடும் அடியார்களை துன்பங்கள் அணு காவண்ணம் காப்பவள் துர்க்கை. இவள் விஷ்ணுவின் சகோதரி. எனவே விஷ்ணுவிற்குரிய சங்கு, சக்கரம், வில், அம்பு ஆகிய ஆயுதங்களை திருக் கரங்களில் தரித்து பசுமை நிறத் திருமேனியளாய் சிங்கவாகனத் தின் மீது காட்சி தருபவள். இவள் தலையில் முடியும் பிறையும் சூடியுள்ளாள். ஆத்தாளைப் பற்றி ஆகமங் கள் கூறும் இடத்து நீலகண்டி, ஷேமங்கரி, அரசித்தி, உருத்திர சூசதுர்க்கை, வனதுர்க்கை, அக்னிதுர்க்கை, சயதுர்க்கை, விந்தியவாசதுர்க்கை, இரிபுமாரிதுர்க்கை என ஒன்பது வகை துர்க்கைகளைக் கூறுகின்றன.

'பொருள் ஒன்றே உள்ளது. அதனை அறிஞர் பலவாறு கூறுவர்' எனும் வேதமொழிக்கேற்ப சக்தி ஒன்று எனினும் அது, அதன் பரந்த தொழிற்பாட்டால் பல வகை வடிவங்கள் பெற்று விளங்குகின்றன. இதனையே சிவஞானசித்தியார் சக்திதான் பலவோ எனில், தான் ஒன்றே அநேகமாக வைத்திடும் காரியத்தால் என்கிறது.

இத்தகைய துர்க்காதேவிதான் ஈழத்தில் உள்ள தெல்லியூரிலும், அருளாட்சி செய்கிறாள். அவளின் இரதோற்சவ நன்னாளில் அவளது மகிமையை அறிந்து அவளை வழிபட்டு நாமும் அவளருள் பெறுவோமாக.

செல்வி கர்ணிகா பாஸ்கரக் குருக்கள்
யாழ்.பல்கலைக் கழக முதலாம் வருடம்

ஈஸ்வரி மர அரிவு ஆலை
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

அழகன் சைக்கிள் வேக்ஸ்
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

சிவன் நகை மாடம்
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

ஜெய துர்க்கா தொலைபேசி சேவை
கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.
T.P: 07021 2770, 07021 3228

ஐங்கரன் வீடியோ அன் ஓடியோ சென்ரர்
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

KAPILAN COMPUTER UNIT
கணனி வகுப்புகள்
நடைபெறுகின்றன
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

ஜீவா ஸ்ரோர்ஸ்
(பலசரக்கு வியாபாரம்)
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்.

பிரபாகரன் கபே
(உணவகம்)
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

ரூபன் புத்தக நிலையம்
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

துர்க்கா களஞ்சியம்
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

நிந்துஜா தையல் நிலையம்
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

படப்பிடிப்புக்கும்
பத்திரிகைகளுக்கும்
கிருபா போட்டோ
மல்லாகம் சந்தி

சயன் உணவகம்
மல்லாகம் சந்தி
உரிமையாளர்: வை.ரவி

TOWN HOUSE
(Home Quality)
K.K.S. Road,
Mallakam.

சுப மங்களா
அழகுசாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையம்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்

தேவி கொம்பிளெக்ஸ்
தொலை பேசிசேவை, போட்டோஸ்ரற் சேவை
ஸ்ரேசன் றோட், மல்லாகம். T.P:2223673

யாழ்ப்பாணம்-சுன்னாகம்
பழரசத் தொழிலகம்
ஜசுபி தயாரிப்புகள்
(உற்பத்திப் பொருட்களை
மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்)
ஜசுபி தொழிலகம், உடுவில்.
விளம்பரதாரர்:
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

ஜெயதுர்க்கா நகைத் தொழிலகம்
22 கரட் தங்க நகைகளை
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுப்பவர்கள்.
ஸ்ரேசன் றோட்,
மல்லாகம்.

சாந்தன் கோப்பி அன் கூல் பார்
தரமான சிற்றுண்டி வகைகள்
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்
கிளை: ரிப்ரொப் உணவகம்
கே.கே.எஸ்.வீதி, மதவடி,
சுன்னாகம்

சோதி ஸ்ருடியோ
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.
கிளை: ஏழாலை

ஈஸ்வரி தொலைத் தொடர்பு நிலையம்
அன் பான்சி
ஸ்ரேசன் றோட், மல்லாகம்.
T.P: 070 212623, 021 2225902
I.D.D. 0094 212623, 0094 212225902

தெல்லிப்பழை பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம்
தெல்லிப்பழை

அளவெட்டி -மல்லாகம்
ப.நோ.கூ. சங்க எரிபொருள்
விற்பனை நிலையம்
மல்லாகம்.
சேவை நேரம் காலை 6.00
மணிமுதல் இரவு 9.00 மணிவரை

சிறி இரும்புத் தொழிலகம்
(பதிவு இல.DS/VN/BR.50)
கே.கே.எஸ்.வீதி
மல்லாகம்

# அமெரிக்காவின் ஆதிக்க வெறியே அங்கு ஏற்பட்ட அழிவுக்குக் காரணம்

## பிரிட்டன் முன்னாள் அமைச்சர் கருத்து

(லண்டன்)

உலகத்தில் அதிக ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தை குறிக்கோளாகக் கொண்டிருந்ததாலேயே 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற பாரிய பயங்கரவாதத் தாக்குதலை அமெரிக்வினால் தடுத்து நிறுத்த முடியாது போனதாக பிட்டனின் முன்னாள் அமைச்சர் மைக்கல் மிக்ஸற் கூறியுள்ளார்.

இத்தாககுதல் இடம்பெறப்போவதை அமெரிக்கா முற்கூட்டியே அறிவித்திருந்த போதிலும், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரொனி பிளேயரின் அமைச்சரவையில் சுற்றாடல்துறை அமைச்சராக முன்னர் பதவி வகித்து வந்த மைக்கல் மிக்ஸற் கார்டியன் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தனது பூகோள அபிலாஷைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும் பொருட்டு, பயங்கரவாதத்திற்கு எதிரான போரென்ற மாயையினை அமெரிக்கா ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (உ-2)

# அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவுள்ள 4 பேரைத் தேடி வலைவிரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருபவர்கள் எனக் கருதப்படும் 4பேரை அமெரிக்காவன் சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாக தேடிவருகின்றனர்.

இவர்களைக் கைது செய்வதற்கு பொதுமக்கள் உதவவேண்டும் எனவும் சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த 4சந்தேகநபர்களில் 2பேர் கடந்த பல மாதங்களாக தலைமறைவாகியிருப்பதாகவும் இவர்கள் உட்பட ஏனைய இருவரினதும் நடமாட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிய நேரிட்டால் தங்களுக்கு அறிவிக்குமாறும் மேற்படி புலனாய்வுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

இந்த நபர்களின் மூலம் அச்சுறுத்தல் இல்லை என்றாலும். ஆயுதங்களுடன் நடமாடும் இந்த நபர்கள் ஆபத்து மிக்கவர்கள் என்பதை அமெரிக்க மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்11ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட மிகவும் மோசமான பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் நினைவு நாள் நெருங்கிக் கொண்டிருப்பதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-9)

# அல்ஜெஸீரா தொலைக்காட்சி செய்தி சேகரிப்பாளர் கைது

(மாட்ரிட்)

அல்ஜெஸீரா தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் ஒருவரை ஸ்பெயின் கைது செய்துள்ளது.

ஒஸாமாபின்லேடனின் அல்கெய்டா இயக்கத்துடன் இந்த நபருக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஸ்பெயின் படைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செய்தியாளர் யுத்தச் செய்திகளைச் சேகரித்துவருபவர் எனவும் ஆபத்தான சந்தர்ப்பங்களிலும் துணிச்சலுடன் செயற்படுபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிரியா நாட்டைச்சேர்ந்த டைஸீர் அலூனி என்ற பெயரைக் கொண்ட கைதான இந்த நபர்,ஐரோப்பாவில் இயங்கும் அல்கெய்டா இயக்கத்துக்கும் இரகசிய தகவல்களை வழங்கி வந்துள்ளதாக மாட்ரிட் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தான்,ஈராக் ஆகிய நாடுகளின் மீது அமெரிக்கா தலைமையில் நடத்தப்பட்டுவந்த போர் குறித்த தகவல்களை சேகரித்து தொலைக்காட்சிக்கு செய்திகள் வழங்கியதன் மூலம் பிரபல்யம் அடைந்த இவர், தற்போது மாட்ரிட் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். (உ-9)

# அமெரிக்காவை எதிர்க்கத் தூண்டுகிறது அவுஸ்திரேலியா

(கான்பரா)

தென்கிழக்காசிய நாடுகளின் உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவரும் மானியங்களையும்,நிவாரணங்களையும் குறைப்பதற்கு ஜரோப்பிய ஒன்றியமும்,அமெரிக்காவும் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று தென்கிழக்காசிய நாடுகளின் அமைப்பிடம் அவுஸ்திரேலியா கேட்டுள்ளது.

இந்த மாதம் 10ஆம் திகதிமுதல் 14ஆம் திகதி வரை மெக்ஸிக்கோவின் ஹான்ஹோம் நகரில் நடைபெற விருக்கின்ற உலக வர்த்தக அமைப்பின் மாநாட்டின் போது தனது கோரிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

உலக விவசாய வர்த்தக விடயத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்மானங்களுக்கு முடிவு எட்டப்படாதபட்சத்தில் உலக வர்த்தக அமைப்பின் மாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்யப் போவதாக அவுஸ்திரேலிய வர்த்தக அமைச்சர் மார்க்வெயில் கூறியுள்ளார்.

கம்போடியாவின் தலைநகரமான நாம்பென்னில் நடைபெற்ற பிராந்தியப் பொருளாதார அமைப்பின் அமைச்சர்கள் மாநாட்டின் முடிவிலேயே அவுஸ்திரேலிய அமைச்சர் இந்தக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் பெரும்பாலான நாடுகள் விவசாயத்துறையை நம்பியிருப்பதனால், அவுஸ்திரேலியா முன்வைத்திருக்கும் இந்தக் கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்கப் போவதாக பிராந்திய பொருளாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம்,அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் விவசாயிகளுக்கு வழங்கும் மானியங்களையும்,நிவாரணங்களையும் குறைத்து வெளிநாட்டு உணவு வகைகளை இறக்குமதி செய்ய எடுத்துவரும் முயற்சிகளுக்கு உலகவர்த்தக அமைப்பின் மாநாட்டின் போது எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்று அவுஸ்திரேலியா மேலும் கேட்டுள்ளது. (உ-9)

# இந்திய – இஸ்ரேல் உச்சிமாநாடு ஷெரோன் புதுடில்லி பயணம்

(புதுடில்லி)

அடுத்தவாரம் நடைபெறவுள்ள இந்திய-இஸ்ரேல் உச்சிமாநாட்டில் பயங்கரவாதத்தை எதிர்ப்பது மற்றும் பாதுகாப்புத்துறையின் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது ஆகியன குறித்து முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷெரோன் மூன்று நாள் விஜயமாக நாளை புதுடில்லி செல்லவுள்ளார்.

முன்னர் உத்தியோக பூர்வவிஜயமாக ஆந்திரா செல்வதற்குத்திட்டமிட்டிருந்த இவர்,தனது பாதுகாப்புக் கருதி அந்த விஜயத்தை ரத்து செய்திருந்தார்.

எனினும் ,தற்போது இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நாளை புதுடில்லி செல்லவுள்ளார்.

அங்கு செல்லும் ஷெரோன், இரு நாடுகளுக்குமான உச்சிமாநாடு முடிவடைந்ததும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயினை தனிப்பட்ட முறையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கூறியுள்ளார்.

அத்துடன்,சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போதைப் பொருள் கடத்தல் தடுப்பு மற்றும் ஏனைய பிரச்சினைகள் குறித்து இருதரப்பினர் ஒப்பந்தங்கள் செய்யவுள்ளனர் எனமேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

# ஸ்ரீநகரில் அதிசக்திவாய்ந்த குண்டுவெடிப்பு; நால்வர் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் நேற்று இடம்பெற்ற சக்தி வாய்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் நான்குபேர் கொல்லப்பட்டதுடன், 25 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் நிறைந்த பழக் கடைத் தொகுதியொன்றிலேயே இக் குண்டு வெடிப்புச்சம்பவம்நிகழ்ந்துள்ளது.

இதன்போது காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்திற்கு எந்தவொரு அமைப்பும் உரிமை கோராத போதும், முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்களின் நாசவேலையாகவே இது இருக்கும் என ஸ்ரீ நகர்ப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, தீவிரவாத அமைப்புக்களின் இவ்வாறான குண்டுத் தாக்குதலகள் தொடர்ந்தவண்ணம் இருப்பதால, இந்தியா - பாகிஸ்தான் இடையேயான முறுகல் நிலை உச்சம் பெறும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-2)

# உலக வர்த்தக செயற்பாடுகளை எதிர்த்து வெனிசுவெலா போராடும்

(காராகஸ்)

உலக வர்த்தகச் செயற்பாடுகள் நியாயமற்றுக் காணப்படுவதால், அதை எதிர்த்து நியாயத்திற்காகப் போராடப் போவதாக வெனிசுவெலா தெரிவித்துள்ளது.

அத்துடன், இம்மாதம் 10ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை மெக்சிக்கோவின் கூன் நகரில் நடைபெறவுள்ள உலக வர்த்தக அமையததின் மாநாட்டின்போது. பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களுக்கு ஆதரவு வழங்கக்கூடாது என அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வெனிசுவெலா வலியுறுத்தவுள்ளது.

அடுத்துவரும், உலக வர்த்தக அமையத்தின் மாநாட்டின்போது, இவ்விடயத்தில் விட்டுக்கொடுப்பின்றிச் செயற்படப் போவதாகவும், எண்ணெய் ஏற்றுமதித் துறையில் முக்கிய ஐந்தாவது நாடாக விளங்கும் வெனிசுவெலா கூறியுள்ளது.

உலக ஏற்றுமதித் துறையில் ஏழ்மையான நாடுகளுக்கு சிறிதளவே சந்தர்ப்பம் கிடைத்ததாகவும், அவற்றின் வாய்ப்புக்களைச் செல்வந்த நாடுகள் அற்றுப்போகச் செய்வதாகவும் வெனிசுவெலாவின் பிரதம வர்த்தகப் பிரதிநிதி விக்ரர் அல் வாரஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்றைய உலக வர்த்தகச் செயற்பாடுகளின் காரணமாக யார் யார் இலாபம் பெறுகின்றார்கள், யார் நட்டமடைகிறார்கள் என்பது தெளிவாகியுள்ளதாகக் கூறிய அவர்,உலக வர்த்தக அமைய மாநாட்டின்போது, போராட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித் துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (உ-2)

## உலக தரிசனம்

# ஈராக் புனரமைப்புக்கு 640 கோடி டொலர் தேவை

## உதவும் நாடுகள் மதிப்பீடு

(பக்தாத்)

ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்கான நிதியுதவியை வழங்கும் நாடுகள் ஒன்றிணைந்து பூர்வாங்கக் கூட்டம் ஒன்றை நேற்று நடத்தியுள்ளன.

ஈராக்கில உடனடியாக மேற்கொள்ளப்படவிருக்கும் உணவு விநியோகம் மற்றும் விவசாயத்துறை நடவடிக்கைகளுக்கு 640 கோடி டொலர்கள் தேவைப்படும் என இக்கூட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

உதவி வழங்கும் நாடுகளின் உத்தியோகபூர்வக் கூட்டம் ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் அடுத்த மாதம் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ,உலக வங்கி சர்வதேச நாணய நிதியம், அமெரிக்கா, ஐரோப்பிய சமூக நாடுகள், ஜபபான், ஐக்கிய அரபு, எமிரேட்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட பலர் இக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

14 துறைகளில் ஈராக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர் நிர்மாண நடவடிக்கைகளில் பெருந்தொகைப் பணம் செலவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் ஈராக் விடயம் தொடர்பான புதிய பிரேரணை சம்பந்தமாக ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வுகாணும் வகையில் 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளைத் தம்மைச் சந்திக்கும்படி ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் இப் புதிய பிரேரணைக்கு ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

எனினும், இப்பிரேரணை ஐ.நா. சபையில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-2)

# ஈராக் நிலை குறித்து பிளேயர் மனக்கவலை

(லண்டன்)

ஈராக்கின் நிலைமை மோசமாகிச் செல்வதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

சதாம்ஹுசைனின் ஆதரவாளர்களும், வெளிநாட்டுப் போராளிகளும் அங்குள்ள பிறநாட்டுப் படையினர் மீதும்,ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் மீதும்,தாக்குதல்கள் நடத்திவருவதாகவும்,அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இப்போதைக்கு மேலதிகப்படைகளை ஈராக்கிற்கு அனுப்பிவைப்பது குறித்துதாம் தீர்மானிக்கவில்லை என்று குறிப்பிட்ட பிளேயர், ஈராக்கின் தற்போதைய நிலமைகுறித்து முக்கிய கவனம் செலுத்திவருவதாகவும் கூறினார்.

மத்திய கிழக்கிற்கு மட்டுமல்லாது முழு உலகினதும் ஸ்திரத்தன்மைக்கு ஈராக் விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-9)

# ஈராக் குறித்து இன்றிரவு உரை

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நாட்டு மக்களுக்கு இன்றிரவு உரையாற்றவுள்ளார்.

ஈராக்கின் தற்போதைய நிலைமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த உரையை ஆற்றவுள்ளதாக வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தின் காரணமாக அமெரிக்கா எதிர்நோக்கிவரும் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி இந்த உரைய்ய ஆற்றவுள்ளதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்ஹொட் மெக்ஹிலினன் தெரிவித்துள்ளார். (உ-9)

# பதவி நீக்கம்

(சென்னை)

தமிழக அமைச்சரவையில் இருந்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அன்வர் ராஜு பதவிநீக்கப்பட்டுள்ளார்.

தமிழக ஆளுநர் ராம்மோகன் ராவ்வை நேற்று முன்தினம் காலை சந்தித்துப் பேசிய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் பரிந்துரைக்கமையவே அன்வர் ராஜு பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு பாபு நடராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.(உ-2)

## இன்று ஒரு தகவல்

# திட்டமிட்டுச் செயற்படுங்கள்

இயந்திரங்கள் உழைப்பதனால் தேய்வதில்லை ராய்வதன்றல் தான் தேய்கின்றது என்று ஒருவர் கூறினார். உண்மை தான். மனிதனும் அப்படித்தான். உழைப்பதனால் ஒன்றும் தேய்ந்து விடமாட்டான். ஆனால் அந்த உழைப்பை முறைப்படி செய்யாததனால் தான் பல சிக்கல்கள் வரும்.

சிலர் என்ன செய்கின்றனர் என்றால் வேலையை மிகவும் கடினமானதாக நினைப்பார்கள். மிகவும் வலுவானதாக நினைப்பார்கள். வேலையை எளிதாகச் செய்வது எப்படி? என்று ஆலோசனை கூறும் அறிஞர்கள் கூறுகின்றனர் என்ன தெரியுமா? எந்த வேலையையும் வலுவானது என்று நினைக்காதீர்கள். அது இலகுவானது என்று மனதில் நினைத்துக் கொண்டோமானால் அந்த வேலையும் இலகுவானதாகி விடும்!

ஒருவருக்கு அலுவலகத்தில் பதவி உயர்வு கிடைத்தது. பெரிய பதவி. எல்லோரும் கூறினார்கள் அவருக்கு எக்கச்சக்கமாக வேலை வரப்போகின்றது. மண்டையைப் பிய்த்துக் கொள்ளப்போகின்றார் என்று . ஆனால் அந்த அதிகாரி அப்படி இல்லை. மண்டையைப் பிய்த்துக்கொள்ளவில்லை. அவர் மிகவும் தெளிவாக இருந்தார். ஏனென்றால் அந்த வேலையை எப்படிச் செய்யலாம் என்று திட்டமிட்டார்.

வேலையை முறையாகத் திட்டமிடல் என்பதிலேயே பாதிவேலை முடிந்து போன மாதிரி. அந்த ஒழுங்குபடுத்துகை எந்த வேலையை உடனடியாகச் செய்வது எந்த வேலையை ஆற அமரச் செய்வது என்று வரைமுறைப்படுத்திக் கொள்கின்றனர் பாருங்கள்! அது மிகவும் அவசியம். நாம் இன்று எந்தெந்த வேலைகளைச் செய்து முடிப்பது என்று திட்டமிடுகிறோம். பாருங்கள் அதில் சில வேலைகள் செய்து முடியாமல் இருந்தால் கூட அதனால் நமக்குக் கிடைக்கும் பயன் என்ன தெரியுமா? டென்ஷன் இல்லாமல் இருக்கும். தெளிவாக இருக்கலாம். இந்த டென்ஷனைக் குறைப்பதற்காகவாவது நாம் வேலைகளை திட்டமிட வேண்டும்.

அடுத்து அறிஞர்கள் கூறும் ஆலோசனைகள் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். ஒரு பொறுப்பில் இருப்பவர்களைப்பற்றி நிறைய விமர்சனங்கள் வரும். அந்த விமர்சனங்களை நினைத்து அவர்கள் கோபப்படவே கூடாது. கோபப்பட்டார்கள் என்றால் இவர்களுடைய வேலையும் நடக்காது. இவர்கள் யாரை வேலை வாங்க நினைக்கின்றார்களோ அவர்களது வேலையும் நடக்காது. கோபப்படாமல் அந்த விமர்சனங்களை அலசிப்பார்க்கவேண்டும்.

விமர்சனங்கள் தகுதியுடையதா? இல்லையா இதில் உண்மை இருக்கின்றதா? இல்லையா? உண்மை இருப்பதாக இவர்கள் உணர்ந்தால் அந்தத் தவறுகளைப் போக்குவது எப்படி? அவற்றைச் சரிப்படுத்திக் கொண்டு தமது பணிகளை நன்றாகச் செய்வது எப்படி என்று யோசிக்கவேண்டும். அல்லது அந்த விமர்சனங்களுக்கு அர்த்தமே கிடையாது என்றால் அதை அப்படியே ஒதுக்கி விடவேண்டும். பின் அந்த விமர்சனத்தைப் பற்றி உளைந்து கொண்டிருக்கவே கூடாது. இப்படி ஒரு தெளிவு இருந்ததென்றால் மற்ற வேலைகளைச் சரியாகச் செய்ய முடியும்.

இதற்கென ஆங்கிலத்தில் சரியான விளக்கம் கூறுவார்கள். என்னவென்றால் பிரெய்ன் ஸ்ட்ரெயினிங் எதையுமே பிரச்சினையாக மனத்தில் போட்டுக் குழப்புவது. இன்னும் சிலர் என்ன செய்வார்கள் என்றால் எக்கச்சக்கமான காரியங்களை மண்டையில் போட்டுக் குழம்பிக்கொண்டிருப்பார்கள். தெளிவே இருக்காது. அதனால் அவர்களே தெளிவில்லாமல் ஆகிவிடுவார்கள். அதனால் பிலெரய்ன் ஸ்ட்ரெயினிங் இருக்கக்கூடாது.

அதற்கு மாறாக ஒரு பிரச்சினை வந்து விட்டால் எல்லாவற்றுக்கும் நாமாகவே தீர்வு காண முடியுமா? முடியாது! அதனால் பக்கத்தில் உள்ளவர்களுடன் கலந்து பேசி முடிவெடுங்கள். அனுபவம் உள்ளவர்களிடம் அனுபவரீதியாக இதற்கு என்ன தீர்வு? என்று விபரமாகக் கேளுங்கள். மற்றவர்களிடம் உங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.

சில மாணவர்களைப் பார்த்தீர்களானால் இந்த விடயத்தில் அவர்கள் சில நடைமுறைகளைப் பின்பற்றுவார்கள். இவர்கள் அலட்டிக்கொள்வதில்லை. ஆசிரியரிடம் கேட்பார்கள்.

ஒரு பாடசாலையில் இரண்டாம் தவணைப்பரீட்சை வரப்போகின்றது. ஆசிரியர் மாணவர்களிடம் கேட்டார். "பிள்ளைகளே ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்! பரீட்சை வரப்போகின்றது அல்லவா?" என்றார். அப்போது ஒரு மாணவன் மெதுவாக எழுந்து கேட்டான். "பரீட்சையில் எந்தமாதிரியான வினாக்கள் வரும் என்று கூறுங்கள்" அதற்கு ஆசிரியர் "நான அதைப் பற்றிக் கூற மாட்டேன்" என்றார்.

இன்னுமோர் மாணவன் எழுந்தான் "சார் என்ன வினாக்கள் வரும் என்று கூறவேண்டாம். என்னென்ன வினாக்கள் வராது என்று கூறுங்கள" என்றான். அதையும் கூறமாட்டேன் என்று விட்டார். வேறு ஓர் மாணவன் எழுந்தான். "ஒன்றும் வேண்டாம் சார் இதை மட்டும் கூறுங்கள்! எதாவது வினாத்தாளை எங்கு அச்சடிப்பீர்கள். அந்த இடத்தைக் கூறினால் போதும" என்றான். இது எப்படி இருக்கும்!

**இளசை சுந்தரம்**

# இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை

## பொ.ஐ.மு.வைத் தூண்டுகிறது சிஹல உறுமய

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக சபை வழங்குவதனை தடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை என சிஹல உறுமயக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது பற்றி சிஹல உறுமயக்கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண கருத்து வெளியிடுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிஸில் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பதில் வரைபை விரைவில் அரசிற்கு அனுப்பி வைத்ததும் அரசு அதனை உடனடியாக அமுல்படுத்தவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில்,பிரதான எதிர்க் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணி இடைக்கால நிர்வாக சபைக் கெதிராக பேசி வருகின்றதே தவிர அதற்கெதிராக எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

குறிப்பாக,ஜனாதிபதி கூட இதனைத் தடுப்பதற்கு தனது நிறைவேற்று அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தவில்லை.

எனவே,இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க துரித நடவடிக்கை எடுத்தால் அதற்கு முழுமையான ஆதரவு வழங்கு வோம என்று சிஹல உறுமயக் கட்சித் தலைவர் திலக் கருணாரட்ண மேலும தெரிவித்தார். (உ-10)

# போராட்டத்தை முளையில் கிள்ளிவிடவே இனக்கலவரங்கள் கட்டவிழ்க்கப்பட்டன

## அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் உரை

(மட்டக்களப்பு)

படுகொலைகளைக் கண்டு அஞ்சி ஒடுங்காது, தமிழர் பலத்தை பல வேறு வழிகளில் பெருக்கியமையினால் தான் இன்று தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழும் நிலை ஏற்பட்டுள்ளது என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்பட்ட துக்க தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

தமிழர் உரிமைக்கான விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறிய போது,அதனை முளையில் கிள்ளி விடுவதற்காக தமிழர் தாயகத்தில் படுகொலைகள்.இனக் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இருந்த போதிலும் தமிழ் மக்கள் அவற்றிற்கு அஞ்சாது முகம் கொடுத்து வந்தனர்.

ஆயுத ரீதியில் தமிழர் சம பலத்துடன் இருப்பதனாலேயே, படுகொலைகள் அற்ற சூழ்நிலையில் தமிழர்கள் இப்போது வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப் பட்டனர்.

தந்தை செல்வாவின் காலத்தில் இருந்து ஆரம்பித்த போராட்டம் இன்று பல பரிணாமங்களைக் கண்டுள்ளது. அப்பாவி மக்களைக் கொன்று குவித்த இனவாதிகளைக் கட்டுப் படுத்தி தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே நாம் ஆயுதம் ஏந்தினோம்.

இதனடிப்படையிலேயே தற்போது சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.கடந்த கால சிங்களப் பேரினவாதிகள் எம்மை ஏமாற்றியது போல் இனியும் நாம் ஏமாறமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (து)

## இராசி பலன்

**07. 09. 2003**
(ஆவணி 21,ஞாயிறு)

துவாதசி- ந. இ. 12.07 வரை
உத்தராடம் - பி.ப. 4. 21 வரை
இராகுகாலம் - 4.34 - 06.04
சுபநேரம் - 09.04- 10.34
அமிர்தம்

**மேடம்**
நல்ல செய்திஅறிதல், தொழில் நன்மை, காரிய அனுகூலம், அதிகாரம்.

**இடபம்**
பித்த ரோகம், மனச்சஞ்சலம், காரிய தாமதம், கட்டுப்பாடு.

**மிதுனம்**
உறவினர் வெறுப்பு, பிரயாணபயம், தொழில் கஷ்டம்,திடீர் நன்மை.

**கடகம்**
சௌக்கிய விருத்தி, எடுத்த காரியம் கைகூடும், புத்தி சாதுரியம், போசன சுகம்.

**சிங்கம்**
மனமகிழ்ச்சி, பகைவர் நேசம், உடல் நலம், ஜனவசியம்.

**கன்னி**
சிறு வியாதி, மனச்சோர்வு, தனவிரயம், வியாபார நன்மை.

**துலாம்**
வாகன சுகம், உறவினர் சந்திப்பு, காரிய தாமதம், ரோக பயம்.

**விருச்சிகம்**
சகோதரர் உதவி, பிரயாண நன்மை, நல்ல முயற்சி, நல்லவருமானம்.

**தனுசு**
விவாதம், பித்தரோகம், முயற்சி தாமதம், அதிக செலவு.

**மகரம்**
ஜனவசியம், பிறர் உதவி, கருமங்கள் கைகூடும், அமைதிநிலை.

**கும்பம்**
பிரயாணம், சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம், சுப செலவு.

**மீனம்**
இஷ்டசித்தி, நல்ல மனைவாசம், பொருள் சேர்க்கை, மேன்மை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வள்ளுவன்.

# கொழும்புத்துறைப் பகுதியில் இரவு நேர ரோந்துப்பணி

(கொழும்புத்துறை)

இளைஞர் குழுக்களின் அட்டகாசத்தால் கொழும்புத்துறைப் பகுதியில் தற்போது பொலிஸார் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கொழும்புத்துறை வீதி-யாழ். பிரதான வீதி ஆகியவற்றில் இரவு 9.30மணிக்குப் பின்னர் இவ்வாறு ரோந்தில் ஈடுபடும் பொலிஸார் வீதியில் நடமாடுவோரை வழிமறித்துச் சோதனை செய்வதுடன்,அவர்களது அடையாள அட்டைகளையும் பரிசோதிக்கின்றனர்.

மேற்படி பகுதியில் இளைஞர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்று வருகின்ற மோதல்களினால் நிலவும் பதற்ற நிலையை அடுத்தே பொலிஸார் வீதிச்சோதனை நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-51)

# யாழ். குடாநாட்டில் போலி வின்ரோஜன் பாவனையில்

(வேலணை)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் போலி வின்ரோஜன் மருந்துகள் பாவனையில் இருப்பதாக உணவு மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் பல பகுதிகளிற்கும் சுகாதாரப் பரிசோதகர்களுடன் சென்று திடீர் பரிசோதனைகள் நடத்திய போது தனியார் மருந்துக் கடைகள் மற்றும் பலசரக்குக்கடைகளில் போலி வின்ரோஜன் மருந்துகள் பெருந்தொகையாகக் கைப்பறறப்பட்டு அந்த இடங்களில் வைத்தே அழிக்கப்பட்டன.

இப்போலி மருந்துகளுக்கு மருந்து தயாரித்த கம்பனியின் பெயரோ, பதிவு இலக்கமோ இருக்கமாட்டாதெனவும் இதனைப் பார்வையிட்டு உறுதி செய்து கொண்ட பின் இவற்றை வாங்கும்படியும் பொது மக்களை உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி கோரியுள்ளார்.

(உ-47)

# கொழும்பு மேல் நீதிமன்றினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவரை மேன்முறையீட்டு நீதிமன்று விடுதலை

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 4 வருட கடுழியச் சிறைத்தண்டனை பெற்ற ஒருவரை மேன் முறையீட்டு நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கொழும்பு பொறல்லையைச் சேர்ந்த வரும் 3 பிள்ளைகளின் தந்தையுமான முகம்மட் உசைன் முகம்மட் இப்ராஹீம்(வயது-50) என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார்.

கைக்குண்டு ஒன்றை தனது பாதுகாப்பில் வைத்திருந்ததாக தீங்கிழைக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் இவருக்கெதிராக சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

விசாரணை முடிவில் 1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி அவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு 4 வருட கடுழியச் சிறைத் தண்டனையும், 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இத்தீர்ப்பினை எதிர்த்து எதிரி மேன் முறையீடு செய்திருந்தார்.

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் சந்திரதாஸ நாணயக்கார, கே.பாலபட்டபெண்டி ஆகியோர் விசாரணையின் பின் வழங்கிய தீர்ப்பில்,கொழும்பு மேல் நீதிமன்றத் தீர்ப்பும தண்டனையும ரத்துச் செய்யப்படுவதாகத் தெரிவித்தனர். (உ)

# இந்து கலாசார அமைச்சரின் சிபார்சில்

# 55 பேருக்கு சமாதான நீதவான் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனின் சிபார்சின் பேரில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 55 பேரை நீதி நிர்வாகக் கட்டமைப்பு அமைச்சு சமாதான நீதவான்களாக நியமித்துள்ளது.

இந் நியமனம் பெற்றவர்களின் பெயர்,விபரங்கள் வருமாறு,

எஸ்.கிருபைராஜ்-வளவு தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி.
ஆர்.இராஜகுமாரன்-389, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.
ஆர்.ஜெயராஜா-10,தாளையடி வீதி,திருநெல்வேலி.
ஆர்.ஜெயசேகரன்-42/3,அம்மன் வீதி, கந்தர்மடம்.
ஆர்.நித்தியானந்தன்-281/7, கண்டி வீதி,யாழ்ப்பாணம்.
எஸ்.சுப்பிரமணியம்- 'லக்சுமி பவனும்' சமரபாகு, உடுப்பிட்டி.
எஸ். முத்துக்குமாரசாமி- கோண்டாவில் மேற்கு.
ஆர்.சிவபாலு-79, மூத்தவிநாயகர் வீதி,நல்லூர்.
எஸ்.இரட்ணராசா- கருங்காலி, காரைநகர்.
ஆர்.சிவலிங்கம்-இரட்ணம் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு.
வண.ஜே.பிரான்சிஸ்-புனித அந்தோனியார் கோவில், தாளையடி.
வண.ஜே.நிக்கிலாஸ்-ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
வண.ரூபன் மரியாம்பிள்ளை புனித ஜோசப் கத்தோலிக்க அச்சகம், 386, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
எஸ்.குமாரசாமி- உயரப்புலம், ம.ம.வி.ரி.எம். பாடசாலை வீதி, ஆனைக்கோட்டை.
எஸ். நாகலிங்கம்- 'லிங்கம்ஸ்' கரணவாய் தெற்கு, கரவெட்டி.
ஆர்.சிவபுண்ணியம்- 'தமிழகம்' தும்பளை. பருத்தித்துறை.
எஸ்.கனகராசா- 34/7, சேர்ட்டி வீதி, நல்லூர்.
எஸ்.குணபாலசிங்கம்- 14, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.
எஸ். தங்கேஸ்வரன்- ஆத்தியடி. பருத்தித்துறை.
எஸ்.கோகிலதாசன்-வதிரி,கரவெட்டி.
எஸ்.சாந்தலிங்கம்-தும்பளை வீதி, பருத்தித்துறை.
எஸ்.சுந்தரேஸ்வரக்குருக்கள்- அருள்வளர்சுந்தர ஆஞ்சநேயர் கோவில், இணுவில்.
எஸ். மன்மதராஜலிங்கம்- 30/12, மூத்தவிநாயகர் வீதி,நல்லூர்.
ஆர்.இராஜேந்திரம்-மாலுசந்தி, அல்வாய் தெற்கு.
எஸ்.கார்த்திகேசு-4ஆம் வட்டாரம், வேலணை,துறையூர்.
எஸ்.சின்னையா வீரசிங்கம்-துரையன் தோட்டம்,கரவெட்டி வடக்கு.
எஸ்.புவனேசமூர்த்தி- 253/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
எஸ்.தம்பிராஜா மகாலிங்கம்-7ஆம் வட்டாரம்,வேலணை மேற்கு.
எஸ்.சிவராசா குருக்கள்-வீரகாளியம்மன் கோயில்,நல்லூர்.
எஸ்.நவரட்ணராசா-குப்பிளான் தெற்கு.
எஸ்.சிவஞானசுந்தரம்-சிறைச்சாலை தலைமையதிகாரி,சிறைச்சாலை தலைமையக விடுதி,யாழ்ப்பாணம்.
எஸ்.சிவசூரியகுமரன்-கரவெட்டி தெற்கு.
ஆர்.கந்தையா- 'அஜந்தா' நெடுந்தீவு 04.
ரி.ராயுமேஸ்- அட்வான்ஸ்ட் ரெக்னிக்கல் இன்ஸ்ரியுட்,78,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
எஸ்.பிரபாகரன்-விக்னேஸ்வரா கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு.
ரி.கந்தசாமி-காரைக்கால் சிவன் கோவிலடி,இணுவில்.
ஆர்.ஞானகுமார்-154,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
ஆர்.பரதன்-8ஆம் வட்டாரம், மண்டைதீவு.
ஆர்.யோகராஜா-34,மூத்தவிநாயகர் வீதி,நல்லூர்.யாழ்ப்பாணம்.
ஆர்.பரமநாதன்-பிராமணந் தோட்டம், கரவெட்டி கிழக்கு.
ஆர்.பூபாலசிங்கம்-பொன்னாலை வீதி,யாழ்ப்பாணம்.
எஸ்.மாணிக்கம்- 1ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
எஸ்.ஜெகதீசன்-யார்க்கரு வீதி, கரவெட்டி கிழக்கு.
எஸ்.கதிரமலை-காஞ்சிபுரம்,மாதகல்.
எஸ்.சோமசேகரம்-53,யமுனா வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
எஸ்.குமாரசாமி சண்முகலிங்கம்- 3ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
பி.அற்சுதம்பிள்ளை-2சோமசுந்தரம் அவன்யு,சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.
பி.பாக்கியராஜா- 74,குகன் வீதி, அரியாலை.
பி.பாஸ்கரன்-சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
பி.இராஜரட்ணம்-48,மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.
பி.புலேந்திரராஜா-54,புதிய செம்மணி வீதி,யாழ்ப்பாணம்.
பி.சுப்பிரமணியம்-ஆத்தியடி, பருத்தித்துறை.
எஸ்.மகாலிங்க சிவகுருக்கள்- அரசடி விநாயகர் கோவில், நாயன்மார்கட்டு,யாழ்ப்பாணம்.
எஸ்.மகேஸ்வரன் குருக்கள்-ஸ்ரீ இராஜேஸ்வரி கோவில், நாயன்மார் கட்டு,யாழ்ப்பாணம்.
எஸ்.ஜெயசிங்கம்- பங்களா வீதி, மீசாலை மேற்கு

இவர்கள் தமது நியமனக் கடிதங்களை பலாலி வீதியில் அமைந்துள்ள அமைச்சின் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பெற்றுக் கொள்ளலாம் என அமைச்சின் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் மு.கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (உ)

## திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில்

## மாபெரும் ஈழத்துக் கூத்து விழா

### நான்கு தினங்கள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

"நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்" என்ற தொனிப் பொருளில் திருமறைக் கலாமன்றத்தினரால் மாபெரும் ஈழத்துக் கூத்து விழா இம்மாதம் 11ஆம் திகதி ... இணைந்த கருத்தரங்குகளும் இரவு அமர்வுகளின் போது யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு,வன்னி மற்றும் மலையகப் பிரதேசக கலைஞர்களின் கூத்துக்களும் இடம்பெறும்.

இதில் பங்கேற்பதற்காக தென் ... பகுதித் திருமறைக் கலாமன்றங்களின் பிரதிநிதிகள் பலரும் இங்கு வருகை தரவுள்ளனர்.

மறைந்து செல்லும் கூத்துக் கலைக்கு புத்துயிரூட்டும் முயற்சி இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சமாதான நீதவானாக நியமனம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி-வேலணை ஆகிய இடங்களில் நீண்ட காலமாக மருத்துவ அதிகாரியாக கடமையாற்றி வருபவரும்,எழுத்தாளருமாகிய டாக்டர் கந்தசாமி ஜெயச்சந்திர மூர்த்தி நீதி மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவப் பட்டதாரியாகிய இவர், கிளிநொச்சி, வேலணைப் பகுதிகளில் பல சமய, சமூக சேவைகளில் ஈடுபட்டு வருவதுடன், வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகம், வேலணை கிழக்கு ஐக்கிய உதயமால் சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபகருமாக விளங்குகிறார்.



இவர் பத்திரிகைத்துறையில் பணியாற்றி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில

# மாபெரும் ஈழத்துக் கூத்து விழா

## நான்கு தினங்கள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

''நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்" என்ற தொனிப் பொருளில் திருமறைக் கலாமன்றத் தினரால் மாபெரும் ஈழத்துக் கூத்து விழா இம்மாதம் 11ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையிலான நான்கு தினங்கள் நடாத்தப்படவுள் ளன.

தினமும் முற்பகல் 9.00மணி முதல் பி.ப. 5.00மணிவரை பகல் அமர்வுகளாகவும். மாலை 6.45 மணி முதல் இரவு அமர்வுகளாகவும் இந்த மாபெரும் ஈழத்துக் கூத்து விழா இடம்பெறவுள்ளது.

பகல் அமர்வுகள் யாவும் மறைக கல்வி நடுநிலைய மண்டபத்திலும் இரவு அமர்வுகள் திருமறைக் கலா மன்ற அரங்கிலும் நடைபெறவுள் ளன.

பகல் அமர்வின் போது வெவ் வேறு பிரதேச கூத்து மரபுகள் தொடர் பான செயல் அளிக்கைகளுடன் இணைந்த கருத்தரங்குகளும் இரவு அமர்வுகளின் போது யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு,வன்னி மற்றும் மலையகப் பிரதேசக கலைஞர்களின் கூத்துக்களும் இடம்பெறும்.

இதில் பங்கேற்பதற்காக தென் பகுதித் திருமறைக் கலாமன்றங் களின் பிரதிநிதிகள் பலரும் இங்கு வருகை தரவுள்ளனர்.

மறைந்து செல்லும் கூத்துக் கலைக்கு புத்துயிரூட்டும் முயற்சி இது வென்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

வேலணை கிழக்கைப் பிறப்பிட மாகக் கொண்டவரும் கிளிநொச்சி-வேலணை ஆகிய இடங்களில் நீண்ட காலமாக மருத்துவ அதிகாரியாக கடமையாற்றி வருபவரும்,எழுத்தாள ருமாகிய டாக்டர் கந்தசாமி ஜெயச் சந்திர மூர்த்தி நீதி மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதவா னாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவப் பட்டதாரியாகிய இவர், கிளிநொச்சி, வேலணைப் பகுதிகளில் பல சமய, சமூக சேவை களில் ஈடுபட்டு வருவதுடன், வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகம், வேலணை கிழக்கு ஐக்கிய உதயமால் சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபகருமாக விளங் குகிறார்.



இவர் பத்திரிகைத்துறையில் பணியாற்றி வருபவர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டன் முழுமையாகப் பங்களிக்கும்

## பழைமைவாதக் கட்சியின் பா.உ. பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்



பினர் அனைவரும் மிகவும் கடுமை யாக உழைக்கவேண்டும். யாழ்ப்பா ணத்தில் இருபது வருடகாலமாக இடம் பெற்ற யுத்தத்தின் மூலம் மக்கள் பட்டதுன்பதுயரங்களை என்னால் நன்கு உணரமுடிகின்றது.

வடஅயர்லாந்தில் கடந்த 30 வரு டங்களாக இடம்பெற்ற யுத்தத்தின் அவலங்களைப் போன்று தான் இங்கும் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத் திற்கு விஜயம் செய்திருந்த பிரிட் டனின் பழைமைவாதக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சி யின் பிரதித்தலைவருமாகிய மைக் கேல் அங்கறம் நேற்று முன்தினம் யாழ்.அரச செயலகத்தில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டின் போது இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்,

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளைத் தொடர்வ தில் நான் முழுமையானபங்களிப் பைச் செலுத்திவருகின்றேன்.நாட் டில் சமாதானம் விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கையும் எனக்கு நிரம்ப இருக்கின்றது.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவ தற்கு அரசியல்வாதிகளின் செயற் பாடு மட்டும் போதாது. மக்களும் தமது பரிபூரணமான பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.அதன் மூலம் தான் நீதியுடன் கூடிய சமாதானம் ஏற்படும் என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக் கப்பட்ட தடை நீங்கக்கூடும் ஏதுக் கள் ஏதாவது பிரிட்டனில் காணப்படு கின்றதா? என செய்தியாளர் ஒருவர் கேட்டபோது,

விடுதலைப்புலிகள் மீது மட்டுமல்ல அங்கு பல நாடுகளில் இருக்கும் பயங் கரவாத அமைப்புகள் மீதும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது எமது நாட் டின் சட்டத்திற்கு உட்பட்ட விடயம். அர சியல் மூலம் இதற்கு எதுவும் செய்ய முடியாத நிலை தான் இப்போது உள்ளது.ஆதலால் இது பற்றி நான மேலதிகமாக எதுவும் கூறமுடியா துள்ளது எனக்குறிப்பிட்டார்.

பிரிட்டனில் கொன்லேட்டிக் கட்சி ஆட்சிக்கு வரும்பட்சத்தில் அரசி யல் தஞ்சம்கோரியிருக்கும் இலங் கைத் தமிழ் இளைஞர்கள் மீது எத் தகைய நிலைப்பாட்டினைக்கொண்டிருக் கும் என்பது பற்றி விளக்குகையில்,

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி வருகின்ற உண்மையானவர் களுக்கு அடைக்கலம் வழங்கும் நிலை இருந்து வருகின்றது. இந்நிலை தொடரும் என்றார்.

(உ-16)

## உதைபந்தாட்ட போட்டி

(அளவெட்டி)

தெல்லிப்பழைக் கோட்டப் பாட சாலைகளுக்கிடையில் இடம்பெற்று வரும் உதை பந்தாட்டப்போட்டி யில், நாளை திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யா/ அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் 18 வய தின் கீழ்ப் பிரிவில் யா/ வசாவிளான் மகாவித்தி. எதிர் யா/ மகாஜனாக் கல்லூரியும்,யா/ யூனியன் கல்லூரி எதிர் யா/ மல்லாகம் மகாவித்தியும் மோதவுள்ளன. (உ-103,83)

## சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த சிறுவன், சிகிச்சை பலன ளிக்காத நிலையில் நேற்றுமுன் தினம் அங்கு மரணமடைந்துள்ளான்.

யாழ். நகர் முஸ்லிம் பள்ளிவாசல் பகுதியைச் சேர்ந்த எஸ்.நசுர்தின் (வயது-9) என்ற சிறுவனே குப்பி விளக்கு தட்டுப்பட்டுத் தீப்பற்றியதில் பலத்த எரிகாயங்களுடன் கடந்த 31ஆம் திகதியன்று வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளான். (உ-7,4)

### தலைமன்னார் உதவி அரச அதிபர் பிரிவில்

# 87,505 சதுர கி.மீ நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் மீட்பு

(மன்னார்)

தலைமன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் த்றிடி கண்ணிவெடி அகற்றும் குழுவினரும் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினரும் இணைந்து இது வரை 87 ஆயிரத்து 505 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் நிலக் கண்ணிவெடிகளைத் அகற்றியுள்ள னர்.

இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட நிலக்கண்ணிகளில், ஆயிரத்து 551 மிதிவெடிகளும் 51வெடிக்காத வெடி பொருட்களும் 10 கிளைமோா களும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதியினை மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட் பட்ட பெரியமடு , கன்னாறு,அள வைக்கரை ஆகிய பகுதிகளில்,37 ஆயிரத்து 114 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பிலும் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இப்பகுதியில் 325 மிதிவெடி களும் ஆயிரத்து 143 வெடிக்காத வெடி பொருட்களும் கவச எதிர்ப்பு வெடி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.(தி)

## கொமர்ஷல் வங்கிக் கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் -வங்கியின் நெல்லியடிக் கிளை எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.47 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. (உ)

## வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

யாழ். கொட்டடி சீனிவாசகம் வீதியில் இரவுநேர வீதி விபத்துக்கள் அதிகரிதத்துள்ளன. சீனிவாசகம் வீதி குண்டும் குழியுமான நிலையில் காணப்படுவதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சேதமுற்றிருக்கும் மேற்படி வீதி பலகாலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-18)



## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
## ADMISSION - 2004

1. பின்வரும் இடங்களில் வெற்றிடங்கள் உள்ளன. தரம் 1, தரம் 6.
2. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2003 முதல் 15.09.2003 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15.09.2003க்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2003. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 300.00
7. வயதெல்லைகள்: அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.1998 க்கும் 31.01.1999 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1993 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை: தரம் 6 வகுப்புக்கு 11.10.2003 காலை 9.00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புகளுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடாத்தப்படும். வெற்றிடங்களைப் பொறுத்தே விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

அதிபர்கள்.

(c/6596)


## யாழ்ப்பாணத்தில் அரசின் நிர்வாகக் கட்டமைப்பு...




# தமிழர்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்த இராணுவத்தினருக்கு அருகதையில்லை

## அ.இ.த.கா.கட்சியின் செயலாளர் குமுறல்

(கொழும்பு)

தமிழ்மக்களின் உணர்வுகளையும், கலாசார வெளிப்பாடுகளையும் எடுத்துக்காட்டும் பொங்குதமிழ் நிகழ்வுகளில் இராணுவத்தினரின் தலையீடு ஆரோக்கியமான விடயமாக அமையாது என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் வவுனியா மாவட்டக் கிளை ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், தமிழ்மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற இந் நிகழ்வு தொடர்பாக இராணுவத் தரப்பில் இருந்து எந்தவிதமான கேள்விகளையும் எழுப்பமுடியாது.

தமிழ்மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற இந்த நிகழ்வுகளின் மூலம் இராணுவத் தரப்பில் இருந்து எந்தவிதமான கேள்விகளையும் எழுப்பமுடியாது.

இந்நிகழ்ச்சியின் மூலம், தமிழ் மக்கள தமது உணர்வுகளை வெளிப்படுத்த முயற்சிப்பதில் என்ன தவறு உள்ளது? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பெரும்பான்மை இன மக்கள் வெசாக பண்டிகையைக் கொண்டாடுவது போலவே பொங்குதமிழ் விழாவும்.

தமிழ் மக்களின் கலாசாரத்தைத் தடைசெய்ய முற்படுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

இராணுவத்தினரின் இவ்வாறான செயல்களை எதிர்க்கும், நடவடிக்கைகளுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ். மாவட்டம்

## செப்ரெம்பர் 1 தொடக்கம் செப்ரெம்பர் 7 வரை

## மிதிவெடி மறறும வெடிககாத வெடிபொருடகளினால பாதிககபபடடவர்களின புனர்வாழவு

உடல் அங்கங்களை ஊனமாக்கக்கூடிய விபத்துக்கள் மறக்கமுடியாத மனப்பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்ற ஓர் அனுபவமாக அனைவருக்கும் மாறிவிடுகின்றது. இப்படிப்பட்ட விபத்துக்களின் விளைவாக பழைய தொழிலை தொடரமுடியாத நிலை, கல்வி கற்கும் சிறுவர்களாயின் கல்வியை தொடர்வதில் உள்ள பிரச்சினைகள், போக்குவரத்தில் உள்ள பிரச்சினைகள், பாரபட்சமாக நடாத்தப்படும் நிலை, மருத்துவ ஏனைய செலவீனங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளும், தடைகளும் உருவாகின்றன. வாழ்க்கையானது சவால்கள் நிறைந்ததாக மாறிவிடுகின்றது.

இப்படிப்பட்ட வாழ்க்கையையே மாற்றி அமைக்கக்கூடிய விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள், விளைவுகள் பற்றிப் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கலாம். ஆனால், அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் இவ்வகையான பாதிப்புக்குள்ளானோரின் புனர்வாழ்வு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அரசாங்கமும் பல உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் உடல் ஊனமுற்றோருக்கான, அதிலும் குறிப்பாக மிதிவெடி, வெடிபொருட்களினால் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வகையில் மிதிவெடிப் பாதிப்புக்குட்பட்ட ஒரு நபர் அல்லது அவரது குடும்பம்

1. உடல் ரீதியான இழப்புக்களுக்கான மருத்துவ ஏனைய உதவிகளையும்
2. உள ரீதியான தாக்கங்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும்
3. பொருளாதார ரீதியான இழப்புக்களை ஈடுசெய்யக் கடன் அடிப்படையில் நிதி உதவகளையும் இப்புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருட்களினால் அங்க அல்லது வேறு உடல் ரீதியான இழப்புக்களுக்கு உட்பட்டவர்கள் உடற்பயிற்சி, செயற்கைக் கால் பொருத்துதல், சக்கர நாற்காலி, கவையுள்ள கொம்பு (Crutches) போன்ற சேவைகள், உதவிகளை ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகம் (Jaipur Foot), ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD), குடும்ப புனர்வாழ்வு நிலையம் (FRC) ஆகிய நிறுவனங்களை அணுகுவதன்மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

உளரீதியான தாக்கங்களுக்கான ஆலோசனைச் சேவைகளை.சாந்திகம் (Shanthiham) ,ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) ,குடும்பப் புனர்வாழ்வு நிலையம் (FRC), ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகம் போன்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. மேலும், சுயதொழில் வாய்ப்புக்கான கடன் உதவிகளைச் சர்வோதயம், ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD), ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகம் ஆகிய நிறுவனங்களை அணுகுவதன் மூலம் பெற்று பயனடைய முடியும். இவை தவிர பாடசாலை செல்லும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை செல்லும் சிறுவர்கள் ஆகியோருக்கான கல்வி தொடர்பான நிதியுதவிகளை ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD), சர்வோதயம், ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிலகம் (Jaipur Foot) போன்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

மிதிவெடி மற்றும் வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள், ஒரு நபர் அல்லது அவரது குடும்பம் விபத்தைச் சந்தித்ததில் இருந்து அந் நபரை அல்லது அவரது குடும்பத்தை மீண்டும் சமூகத்தில் பழைய நிலைக்குக் கொண்டுவரும் வரையான சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். இப் புனர்வாழ்வு நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ள உதவி வழங்கும் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மட்டுமன்றிப் பாதிப்புக்குள்ளானவர்களின் ஒத்துழைப்பும்..ஆதரவும் மிகமிக அவசியமாகின்றது.

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C/6601)

# பிறந்த நாளின் பலன்களை அறிந்து உங்கள் வாழ்வை இன்பமாக்குங்கள்

## சோதிட பலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### பிறந்தநாள் பலன்

**பெப்ரவரி 20ஆம் திகதியில் இருந்து மார்ச் 20 ஆம் திகதி வரையில் பிறந்தவர்களுக்கான பலன்கள்.**

மேலே குறிப்பிட்ட நாட்களுக்குள் பிறந்தவர்கள மிக இயற்கையாகவே எதையும் உடனே புரிந்துகொள்ளும் தன்மை பெற்றவர்களாக இருப்பார்கள். இந்த அறிவை இவர்கள் புத்தகத்தைப் படிப்பதினாலோ, கல்வியினாலோ பெறுவதில்லை. சரித்திரம், நாடுகள், உலகப் பயணம், ஆராய்ச்சி ஆகியவை பற்றிப் பொதுவான விசயங்களை மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பார்கள்.

பொதுவாக இவர்கள் இளகிய மனத்துடன் இருந்தாலும், மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற தன்மையைப் பெற்றிருந்தாலும், பண விசயங்களைப் பொறுத்த வகையில் எப்போதும் ஆவல் மிகக்கொண்டு இருப்பார், கள். நாளை நம்முடைய நிலை என்ன ஆகுமோ என்ற கேள்வி இவர்களுக்குள் இருந்துகொண்டே இருக்கும். பணத்தின் மீது உள்ள ஆசையினால் இவர்கள் இப்படி நடந்து கொள்ளுவதில்லை. தம்மிடம் பணம் இல்லாவிட்டால், மற்றவர்களை நம்பி, மற்றவர்களின் உதவியை நாடி வாழ வேண்டுமே என்று எண்ணுவதால் தான், இவர்கள் பணத்தில் மிகுந்த கவனமும், ஆவலும் செலுத்துவார்கள்.

இந்தக் குணத்தை மிக இயற்கையாகவே இவர்கள் பெற்றிருப்பதனால், பலர் இவர்களைத் தவறாகப் புரிந்து கொள்ளுவார்கள். பணத்தின்மீது மட்டும் தான் இவர்களுக்குக் கண் என்று மற்றவர்கள் நம்பும்படி தோற்றமளிப்பார்கள். ஆனால், உண்மை பலருக்குத் தெரியாது!

பணத்தில் இவர்களுக்குப் பற்றுதல் இருப்பதால், பல விஷயங்களில் இவர்கள் நன்மையாக நடந்து கொள்ளத் தவறிவிடுவதுண்டு. ஏதாவது ஒரு சூழ்நிலையில் உணர்ச்சி வசப்பட்டுப் பணம் தருவதாகச் சொல்லிவிடுவார்களே தவிர, அதைப் பற்றி எண்ணிப்பார்க்கமாட்டார்கள். அல்லது சொன்னதில் பாதியைத் தான் தருவார்கள்.

இவர்கள் மனத்தில் எப்போதும ஆசை அலைகள் எழும்பியபடி இருக்கும். அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரிந்தாலும், தாம் எடுத்துக்கொண்ட செயல் வெற்றியுடன் முடியும் என்று ஐயததுடன் செயல்படுவார்கள். செயலில் இதற்குமுன் பல தடவைகள் சிந்திப்பார்கள்.

எப்போதும் இவர்கள் துன்பத்தைப் பற்றியும், உலகம் முழுவதும் நமக்கு எதிராகக் கிளம்பி விட்டதைப் போலவும் எண்ணிக் கொள்ளுவார்கள். இந்தச் சிந்தனையில் இருந்து இவர்களுடைய கருத்து அகலவே அகலாது. அதேநேரத்தில் இவர்கள் என்றும் இறவா வரம் பெற்றவர்களைப் போல் நடந்துகொள்ளுவார்கள்.

இவர்களை நம்பிவிட்ட செயல்களில், இவர்கள் மிகவும் கடமை தவறாமலும் நடந்துகொள்ளுவார்கள். எந்த வேலையை ஏற்றுக்கொண்டாலும், விடாப்பிடியுடனும், முழுமூச்சுடனும் அதைச் செய்து முடிப்பார்கள். பொறுப்புள்ள பணிகளை ஏற்றுச் செய்வதில்தான் இவர்கள் சிறப்புடன் விளங்குவார்கள்.

உலகத்தின் பெரும் ஓவியர்களுள் பலரும், பாடகர்களில் பலரும்,, இலக்கிய எழுத்தாளர்கள் பலரும் இந்தத் திகதிகளில் பிறந்தவர்களே!

ஏற்றுக்கொண்ட தொழிலில், ஆதரவும், பாராட்டும் இருந்தால் தான், இவர்களால் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியும்.

ஏற்றுக்கொள்ளும் செயல்களில் வெற்றியையே இவர்கள் சந்தித்தாலும், இவர்களால் எந்த வேலையும் தாமாகச் சென்று ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மற்றவர்கள் வலியுறுத்திச் சொல்லும் வரையில் அந்தப் பணியை ஏற்றுக்கொள்ளப் காத்திருப்பார்கள்.

சட்டத்திற்கும், நீதிக்கும் மிகவும் கட்டுப்பட்டவர்கள் இவர்கள். பழமைகளிலும், வழக்கங்களிலும் மிகவும் கருத்து செலுத்துபவர்கள் இவர்கள்.

இந்த மாதத்தில் பிறந்தவர்களில் இரு வகையினர் உண்டு. சிலர் ஆடம்பரங்களிலும், எளிய வழிகளில் வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணுவதிலேயே காலத்தைப் கடத்துவார்கள். இவர்களுக்கு நண்பர்கள் நிறைந்த அளவில் இருப்பதைப் போல் எண்ணிக்கொண்டிருப்பார்கள். ஆனால், வாய்ப்பவர்கள் அனைவரும போலி நண்பர்களாகவே இருப்பார்கள். இதனால், தவறான திட்டங்களில் சிக்கித் தவிப்பார்கள். இதனால் ஏற்படும் துன்பங்களை மறைக்க மது அருந்தவும் தொடங்குவார்கள்.

ஆனால், இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் வாழ்க்கை எதற்காக என்று சற்று உணர்ந்து புரிந்துகொண்டாலும், எப்படிப்பட்ட நிலைமைகளையும் சமாளித்து மற்றவர்கள் வியக்கும்படி முன்னேறி விடுவார்கள். இவர்கள் எதிர்பாராத விதத்தில் தமதுசெயல்களில் மாறி, நண்பர்களை விழிப்படையச் செய்வார்கள். அப்போது அவர்கள் போலி நண்பர்களைக் கண்டோ, ஆடம்பரங்களைக் கண்டோ இவர்கள் மனத்தைப் பறிகொடுப்பதில்லை. எளிதில் மற்றவர்களிடம் ஏமாறவும் மாட்டார்கள்.

மார்ச் மாதம் பிறந்த ஒவ்வொரு மனிதர்களுக்கும் இந்த இரண்டு வகைக் குணங்களும் பிறப்பிலேயே வந்துவிடுகின்றன. ஆனால், வளர்ந்த பின், இந்த இரண்டு பாதைகளில் எந்தப் பாதையில் அவன் செல்கிறான் என்பது அவனுடைய சூழ்நிலையைப் பொறுத்தது. முதல் பாதையான அழிவை நோக்கிச் செலுத்தும் ஆபத்தான பாதையில் செல்பவர்களே அதிகம்.

உணர்ச்சிவசப்பட்டு அறிவை இழந்தால், தொடர்பு கொண்டுள்ள மற்ற மனிதர்கள் இவர்களிடம் என்ன சொலலுகிறார்களோ அதன்படி கேட்பார்கள்.

கடற்பயணம் அல்லது ஆற்றுப் பயணம் என்றால் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும் ஆனால், கடலிலோ, ஆற்றிலோ பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைக்காவிட்டால், கடலுக்கு அருகிலோ, ஆற்றின் பக்கத்திலோ, ஏரிக்கரையின் பக்கத்திலோ வீட்டைக் கட்டிக்கொண்டு, எப்போதும் கண்களில் தெரியும்படி வாழவே விரும்புவார்கள்.

### தொழில் திறமை

அயல்நாடுகளுடன் வர்த்தகத் தொழில் செய்வதில் இவர்கள் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள்.

கப்பலில் கப்டனாகவோ, உலகப் பயணம் செய்யவோ இவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்.

எதையும் இவர்கள் திறமையுடன் செய்து முடித்தாலும், இவர்கள் இயற்கையாக இவர்களுக்குச் சில நன்மைகள் பயக்கும். வியக்கும்படி இவர்களுக்கு ஏதாவது வாய்ப்புக்கள் வந்துகொண்டே இருக்கும்.

இயற்கை விநோதங்களிலும், தத்துவங்களிலும் இவர்களிற்கு மிகுந்த பற்றுதலும் ஆராய்ச்சி அறிவும் உண்டு.

எளிதில் சிறிய வி[illegible]ளுக்கும் பெரு மதிப்பு அளிப்பதை விட்டு, உள்ளத்தில் உறுதி பெற்றால் இவர்கள் எண்ணியதைப் பெற முடியும். எந்தப் பதவியையும் அடைய முடியும். பெயரையும், புகழையும் பெற முடியும். இவர்களுக்கு எதையும் முன்கூட்டியே சொல்லும் திறமையுண்டு.

### உடல் நிலை

உடல்நிலையைப் பொறுத்த வரையில்,நரம்புநோய்கள், தூக்கமின்மை, இரத்தக்கோளாறு, அனீமியா போன்ற நோய்களால் துன்பம் வரும். குடல் நோய்களும், பாதங்களிலும் தலை யிலும் வலி, வாயு, மஞ்சள்காமாலை போன்ற நோய்களும் வரும். வெளிச்சமான இடங்களில், வறண்ட சீதோஷ்ண முள்ள இடங்களில் இவர்கள் வாழ்வது மிக நல்லது. இவர்களுக்குப் பிடித்த வண் ணங்கள் செந்நீலம், கருநீலம் என்பன. (தொடரும்)

# முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர்

## கருணா அம்மான் பேட்டி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஆயுதக் குழுக்களின் தோற்றம் அங்குள்ள முஸ்லிம் மக்களிற்கு நேரடியான பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஏனெனில், கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்கள் சமூகத்தோடு இணைந்து வாழ வேண்டிய தேவை இருக்கின்றது. இந்நிலையில், ஆயுதக் கலாசாரம் உருவாகுவது அங்குள்ள முஸ்லிம்களையே பாதிக்கும்.

மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

முஸ்லிம் மக்கள் இவ்விடயத்தில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். அத்துடன், சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் உருவாகிவரும் தீய சக்திகளை மேலும் வளராது தடுக்கும் பொறுப்பும் முஸ்லிம் மக்களிற்கு இருக்க வேண்டும்.

அதேசமயம், முஸ்லிம் - தமிழ் மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தும் பொறுப்பும் எமக்கு இருக்கிறது. இதில் நாம் மிகவும் உறுதியாக இருக்கிறோம்.

யுத்தம் நிறுத்தப்பட்டு நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக தீவிர முயற்சியில் நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற இந்நிலையில், முஸ்லிம் மக்கள் எமக்கு பூரண ஒத்துழைப்புத் தருவதுடன், தமிழ் - முஸ்லிம் மக்கள் மிக ஒற்றுமையுடன் வாழவேண்டும்.



மீண்டுமோர் யுத்தம் ஏற்படாது இருக்க முயற்சி செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

# பாடசாலை செல்லாத சிறுவர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை செல்லாத சிறுவர்களை ஒருங்கிணைத்து புதிய பல செயற்திட்டங்களை அமுல்படுத்த யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையம் தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றது.

மேற்படி சிறுவர்கள் பாடசாலை செல்லாதிருப்பதற்கான காரணங்களை இனம்காணுதல் மற்றும் அதற்கான முக்கிய பிரச்சினைகளை இனம் கண்டு உரிய தீர்வை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகிறது.

பாடசாலை செல்லாத சிறுவர்கள் பற்றிய தகவல்களை அறிந்தவர்கள் தம்முடன் தொடர்புகொண்டு விபரங்களை வழங்குமாறும், தாம் அது விடயம் குறித்து தீர ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது. (உ-7)

# கடை உடைத்துத் திருட்டு

(உடுவில்)

காலைவேளை வியாபாரத் திற்காகக் கடையைத் திறந்த உரிமையாளர் கடையில் பொருட்கள் இல்லாததைப் பார்த்து அதிர்ச்சியுற்றார். இச்சம்பவம் உடுவில் ஆலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கடையை உடைத்துத் திறந்த திருடர்கள், கடையில் இருந்த உணவுப் பொருட்கள், சவர்க்காரங்கள், இனிப்புப் பண்டங்கள் என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர் என மேற்படி கடை உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (உ-261)

# அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மேற்கைச் சேர்ந்த புஸ்பதாசன் புனிதவதனி என்பவருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும். (தி)

# வருடாந்த மாநாடு

(யாழ்ப்பாணம்)

திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளன சலன சித்திரம் அமைப்பின் 7 ஆவது ஆண்டுப்பூர்த்தி விழாவும், வருடாந்த மாநாடும் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை கொழும்புத் தமிழ்ச சங்கத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்காலத்தில் இலங்கையில் தமிழ்சினிமாவை ஆரோக்கியமான பாதையில் வளர்த்தல் மற்றும் ஆக்கிரமிப்புக் கலை கலாசாரத்தை ஒழித்தல் போன்றவற்றைத் தொனிப்பொருளாகக் கொண்டு நடைபெறவுள்ள இம்மாநாட்டின்போது ஆபாசப்பட எதிர் இயக்கம் ஒன்றும் அமைக்கப் படவுள்ளது. (உ-8)

# மிதிவெடி விழிப்புணர்வு நடவடிக்கை

(வேலணை)

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தினரால் செயற்படுத்தப் பட்டுவரும் மிதிவெடி எதிர்ப்புக் கல்வி வாரத்தை ஒட்டி வேலணை, ஊர்காவற்றுறை, சரவணை, புளியங்கூடல் மற்றும் தீவகத்தின் ஏனைய பகுதிகளில் மிதிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகள், துண்டுப் பிரசுர விநியோகங்கள், கலந்துரையாடல்கள் என்பன இடம்பெற்றுவருகின்றன. (உ-47)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திட்டமிடற் சேவையின் IIஆம் வகுப்பு IIஆம் தரத்திலான அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

மேற்படி பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் தினம் அடுத்த மாதம் 6ஆம் திகதியாகும்.

திட்டமிடற் கோட்பாடுகள், முறையியல், திட்டவியல் நிறுவனங்கள், நிதி மற்றும் நிர்வாகம், பொருளாதாரப் பகுப்பாய்வும் புள்ளி விபரவியலும், கருத்திட்ட திட்டமிடல் மற்றும் ஆங்கிலமொழி ஆகிய பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் மேற்படிப் பரீட்சை அமையவுள்ளது.

மேலதிக விபரங்களை இம் மாதம் 5ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானியில் பார்வையிடலாம்(உ-18)

# சாராயம் மீட்பு

(வேலணை)

வேலணைப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் சாராய விற்பனையில் ஈடுபட்டோர் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு விற்பனைக்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான சாராயப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு இத் திடீர் முற்றுகையை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். (உ-47)

# அடுத்த யாத்திரைக்குத் தயாராகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

ஜே.வி.பி.யினர் மேற்கொண்டு வரும் அரச எதிர்ப்பு பாதயாத்திரையின் இரண்டாவது பாதயாத்திரை அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்குபற்றக் கூடியவகையில் அமையும் என கட்சிச் செயலாளர் ரில்வின்சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டியிலிருந்து கொழும்புவரை இப் பாதையாத்திரை இடம்பெறும் எனவும், ஜே.வி.பி.கட்சிக்கும் பொதுஜன ஐக்கியமுன்னணிக்கும் இடையில் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளகூட்டு ஒப்பந்தத்தினையடுத்து இடம்பெறுவுள்ள இப்பாதையாத்திரையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் கலந்துகொள்வார்கள் எனவும் அவர்மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்தமாத இறுதியில் ஜே.வி.பி.யினர் இடைக்கால நிர்வாக சபையை எதிர்த்தும் அரசு மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளைக் கண்டித்தும், கண்டியில் இருந்து கொழும்புவரை பாதயாத்திரையை மேற்கொண்டமை தெரிந்ததே.

(உ-10)

# சுமார் 8 இலட்சம் தென்னைகள் போர் காரணமாக வடக்கில் அழிவு

## தெங்கு அபிவிருத்திச்சபை தகவல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 20வருடகால யுத்தத்தினால் யாழ்ப்பாணம்,முல்லைத் தீவு, கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 7இலட்சத்து 75 ஆயிரத்து 870 தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்திச்சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலேயே அதிகளவில் தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும்,

யாழ்.மாவட்டத்தில் 4இலட்சத்து 27ஆயிரத்து 163 தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளன. தென்மராடசி, முகமாலைப் பகுதிகளிலேயே இதில் பெருமளவு தென்னைகள் அழிந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 47ஆயிரத்து 286 தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளன. பெருமளவு அழிவு கிளிநொச்சி, பரந்தன், கண்டாவளை ஆனையிறவு ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2இலட்சதது ஆயிரத்து 421 தென்னைகள் அழிவடைந்துள்ளன. இதில் பெருமளவு அழிவு முல்லைத்தீவு, அளம்பில், வட்டுவாகல், சிலாவத்தை, முள்ளி வாய்க்கால் பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளது. என்றுள்ளது.

(உ-4,35)

# வலி. வடக்கில் 30 கருத்திட்டங்களை அமுல்செய்ய 14இலட்சத்து 34ஆயிரம் ஒதுக்கு

(சுந்தரோடை)

அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து 14இலட்சத்து 34ஆயிரம் ரூபா வலி-வடக்கு பிரதேச செயலர் பிரிவில் செயற்படவுள்ள 30நுண்கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், மேற்படி நுண்கருத்திட்டங்களும் அவற்றிற்கான நிதிஒதுக்கீட்டு விபரமும் வருமாறு:-

* அளவெட்டி கிழக்கு முற்போக்கு வாலிபர் ச.ச.நிலையம்-97,000
* அண்ணா ச.ச.நிலையம் (கட்டடம்) 97,000
* அளவெட்டி மகாஜன ச.ச.நிலையம்-90,000
* கணேஷ்வரன் ஐக்கிய வாணிபர் ச.ச.நிலையம்-48,500
* பத்துப் பனையடி ஈஸ்வரி ச.ச. நிலையம்-24,250
* பத்துப் பனையடி ஈஸ்வரி முன்பள்ளி-24,250
* மல்லாகம் சன்மார்க்க ச.ச.நிலையம்-33,950
* பன்னாலை ஐக்கிய பெண்கள் ச.ச.நிலையம்-24,250
* மல்லாகம் கலைமகள் ச.ச.நிலையம்-24,250
* 28 முன்பள்ளிகளுக்கான கல்வி உபகரணங்கள்-1,35,800
* ஸ்ரீகணேஷ் ச.ச.நிலைய கட்டடம் -25,000
* வித்தியாதர முன்பள்ளி-25,000
* இளைஞர் ச.ச.நிலைய முன்பள்ளி -25,000
* கணேஷா முன்பள்ளி-25,000
* குமிளமவளை ச.ச.நிலைய முன்பள்ளி-25,000
* பன்னாலை ஸ்ரீகந்தையா ச.ச. நிலையம்-50,000
* செங்கட ச.ச.நிலையம்-25,000
* அண்ணா சசநிலையம் (தளபாடம்)-25,000
* மல்லாகம் கிராம முன்னேற்ற ச.ச.நிலையம்-25,000
* குரும்பசிட்டி கிராம முன்னேற்ற அபிவிருத்திச்சங்கம்-50,000
* மாவிட்டபுரம் கிராம முன்னேற்ற அபிவிருத்திச்சங்கம்-50,000
* குட்டியபுலம் அ.த.க.பாடசாலை (தளபாடம்)-50,000
* வசாவிளான் ம.ம.வித்தி-75,000
* பன்னாலை ஸ்ரீகணேஷா வித்தி (திருத்தம்)-50,000
* குட்டியபுலம் அ.த.க.பாடசாலை (அபிவிருத்தி)-1,00,000
* துர்க்காபுரம் சிறுவர் பூங்கா-48,500
* சென் சேவியர் முன்பள்ளி-48,500
* வலி-வடக்கு (கலாசார மண்டபம்)-40,000
* சித்தியம் புளியடி ஞானவைரவர் கோவில்-48,500
* ஐயன்சுடர் விளையாட்டுக் கழகம் -24,250

(உ-103)

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆங்கில பாடஅடைவு மட்டத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் ஆங்கிலபாட அடைவு மட்டத்தை அதிகரிக்க மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் முதல்கட்டமாக எதிர்வரும் டிசம்பர்மாதம் க.பொ.த.சாதரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட செயற்றிட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது.

அதன்படி விசேட பயிற்சித்தாள் இவாகளுக்கு வழங்கப்பட்டு அடைவு மட்டம் பரீட்சிக்கப்படும் பின்னர் அவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பரிகார்ர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இப் பயிற்சித்தாள் க.பொ.த.சாதாரண பரீட்சை வினாத்தாளை அடியொற்றியதாக அமையும் என உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

(உ-10)

# ஸ்ரீ.ல.சு.கட்சியின் வளர்ச்சியிலேயே ஐ.தே. கட்சியின் வீழ்ச்சி தங்கியுள்ளது

## ஜனாதிபதி சந்திரிகா சூளுரை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி புதிதாக உருவாக்கியுள்ள அரசியல் முறைமைக்கு முகம் கொடுக்கும் வகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை கட்டியெழுப்ப வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் புதிய இணையத்தளத்தினை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களாக குற்றச் செயல்களும் மோசடிகளும் மலிந்து காணப்படுகின்றன. ஆனால் இச் சம்பவங்கள் யாவும் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பலப்படுததப்படுமாயின் யார் என்ன குறை கூறினாலும் கட்சியை அழிப்பதற்கு எவராலும் முடியாது என சூளுரைத்தார்.

எதிர்கட்சித்தலைவர், மஹிந்த ராஜபக்ஷ அங்கு பேசுகையில், ஸ்ரீலங்ா சுதந்திரக்கட்சியை நேர்த்தியாகவும், உறுதியாகவும் கட்டி எழுப்புவதன் மூலமே ஐ.தே.மு. அரசின் ஆட்சியை வீழ்த்த முடியும்.

இதன் நிமித்தம் கட்சியை புலப்படுத்தும் பொருட்டு, இன்று முதல் வீட்டுக்கு வீடு என்ற செயற்திட்டமொன்றை பிலியந்தலையில் இருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.

இதன் மூலம் கட்சியின் ஆதரவாளர்களை ஒன்று திரட்டவும் புதிய உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

1956ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எவ்வாறு ஆட்சிபீடம் ஏறியதோ அதே போன்று எதிர்காலத்தில் கட்சியின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் புதிய ஆட்சி உருவாக்கப்படுவதை எவராலும் தடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி)

# மீளக் குடியமர்த்தும் வரை உதவிகளை ஏற்பதில்லை

## இடம்பெயர்ந்த மக்கள் தீர்மானம்

(ஏழாலை)

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசக் கூட்டம் நேற்று முன்தினம் சமாசத்தலைவர் த.கணேஸ் தலைமையில் சுன்னாகதில் நடைபெற்றது.

இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களிலுள்ள பாடசாலைக்கு செல்லும் மாணவர்களுக்கு கல்வியை ஊக்குவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தல்.

அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் எந்த உதவியையும் ஏற்காது சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டிய ஒழுங்கை ஏற்படுத்திதரவேண்டும் எனக் கோருதல.

தற்போது முகாம் அமைந்துள்ள பகுதிகளில் இருந்து சொந்த இடம் செல்லும் வரை எத்தனை அழுத்தங்கள் ஏற்பட்டாலும் எழும்புவதில்லை என்பதில் உறுதியாக இருத்தல் உள்ளிட்ட பல தீர்மானங்கள் இக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன. (உ-12)

# பல்கலைக்கழகங்களில் ஜே.வி.பியின் ஆதிக்கத்தை அடியோடு சாய்க்கவேண்டும்

## ஐக்கிய ஒத்துழைப்பு மாணவர் முன்னணி குரல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களுக்குள் மாணவர்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தி அதனூடாக வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி மறைமுகமாக செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு ஐக்கிய ஒத்துழைப்பு மாணவர் முன்னணி என்ற பல்கலைக்கழக மாணவர் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. மேற்படி மாணவர் அமைப்பு அண்மையில் கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் இது தொடர்பாக நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் மேலும் கூறுகையில்,

பலகலைக்கழகங்களில் நிலவும அமைதியின்மைக்கும், குழப்பங்களுக்கும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமே காரணம். இம்மாணவர் ஒன்றியும் பல்கலைக்கழகங்களுக்குள் ஜே.வி.பி.யின் அரசியல் அபிலாசைகளுக்காகப் பாடுபடுகின்றது.

ஜே.வி.பி.யின் அரசியல் தாளத்திற்கு பல்கலைக்கழக மாணவர்களை பலியாக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செயற்பட்டு வருகின்றது.

இதன்காரணமாகப் பல்கலைகழகங்களில் பட்டம் பெற்று வெளியேறி தொழில் வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்ற மாணவர்களின் எதிர்பார்ப்புக்கள் பகற்கனவாகின்றன.

ஜே.வி.பி.யின் அரசியல் சிந்தனைதளை பல்கலைக்கழகங்களில வேரூன்றச் செய்யப் பாடுபடும் அனைதுப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகளை எதிர்ப்பதற்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவ்களும் ஒன்றிணைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். (உ-08)

## பிள்ளைகளை வேலைக்கமர்த்துதல் எவ்வாறு பால்ய இம்சையாகும்?

**சட்டத்துக்கு மாறாகப் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் பால்ய இம்சையின் மற்றொரு வடிவமாகும்.**

**வீட்டு வேலைக்காரர்களாக அமர்த்திய பிள்ளைகளை தொழில் கொள்வோர் பாலியல் மற்றும் சரீர இம்சைக்கு உட்படுத்துவதாக அடிக்கடி முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழில்கொள்வோர் இரண்டு வகையாகச் சட்டத்தை மீறுகிறார்கள். ஒன்று வயது குறைந்த பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் மற்றொன்று அவர்களை இம்சைப் படுத்துதல்.**

**வீட்டு வேலைக்காரர்களாக அமர்த்தப்படும் பிள்ளைகள் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், அநேகமானோர் தமது வீடுகளில் அன்றாட உணவுக்கே வழியற்றிருப்பவர்கள் என்றும் தொழில்கொள்வோர் பொதுவாக நியாயப்படுத்துவதுண்டு. சட்டத்தை மீறும் செயலை வறுமை நியாயப்படுத்த முடியாது.**

**உங்கள் சமூகத்தில் இவ்வாறு சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பின் உடன் எமக்கு அறிவியுங்கள்.**

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு**

அறை இல. 30
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

[c/6625]

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் - குறள்

# வலம்புரி

## பிரதமரின் எச்சரிக்கை

தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் முறிவடைந்தால், மீண்டுமோர் யுத்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை செய்துள்ளார்.

பிரதமர் இதனைக் கூறாவிட்டாலும் அந்த உண்மையை நாட்டுமக்கள் நன்கு உணர்ந்தேயுள்ளனர். அவர்கள் அதனை உணர்ந்ததன் காரணமாகவே சமாதானத்திற்கான யுத்தமென்று கோஷமெழுப்பிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியை ஆட்சியில் இருந்து விலத்தி, எப்படியும் சமாதானத்தைக் காண்போமெனப் பிரசாரம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியில் அமர்த்தினர். ஆகையினால் நாட்டு மக்களைப் பொறுத்தவரை அவர்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள்.

அவர்கள் சமாதானத்திற்காக காத்திருக்கிறார்கள். எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த எச்சரிக்கை நாட்டு மக்களுக்கு பொருத்துடையதல்ல என்பதால், அதற்குப் பொருத்தமானவர்கள் யார் என்ற கேள்வி எழும் போது அதற்குப் பதில் அரசியல்வாதிகள் என்பதாகவே அமையும்.

அவ்வகையில் பிரதமர் ரணில விடுத்த எச்சரிக்கை அவர் உட்பட அனைத்து அரசியல்வாதிகளுக்கும் பொருத்துடையதாகும். இலங்கையில் கடந்த இருபது வருட காலமாக யுத்தம் நடைபெற்றுவருவதற்கு மூலகாரணமாக இருப்பவர்கள் அரசியல்வாதிகளே. குறிப்பாக பேரினவாத அரசியல்வாதிகள் இனவாதத் தயை எரியூட்டுவதன மூலம பசியாறியவர்கள். அதனால் அவர்கள், இனவாதம் பேசுவதில் இருந்து விலகப் போவதில்லை. நாடு எரிந்தாலதான் அவர்களுடைய வீட்டில் அடுப்பு எரியும் என்ற நிலைமை உருவாகிவிட்டது. இந்நிலையில் எப்பாடுபட்டும் சமாதானத்தை ஏற்படுத்துவோமென மக்களுக்கு வாக்குறுதியை அளித்து ஆட்சிப்பீடமேறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் விடுத்த எச்சரிக்கையை தன தாக்கிக் கொண்டு சமாதானத்தை ஏற்படுத்தப் பாடுபட வேண்டும்.

தமிழர்கள் தமது தாயகத்தில் குடியிருக்க முடியவில்லை. அவர்களின் குடியிருப்புப் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரோடு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதே வேளை யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி இதுவரை வழங்கப்படவில்லை. இதற்கெல்லாம் காரணம் பேரினவாதிகள் என்று சொல்லிவிட முடியாது .

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானம் ஏற்படவேண்டுமென விசுவாசமாக எண்ணுவாரே ஆயின் உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியிருப்பதற்கு ஒரு போதும் தடை விதித்திருக்க மாட்டார்.

எனவே சமாதான முயற்சிகள் குழம்பினால் மீண்டும் யுத்தம் ஏற்படுமென்ற உண்மையை உணர்ந்த பிரதமர் அந்த யுத்தம் ஏற்படாதவாறு தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

# அன்பான வார்த்தைகளைப் பேசி அனைவரையும் நல்வழிப்படுத்துங்கள்

**அன்ரன:**-பேப்பரைச் சுழற்றிச் சுழற்றிப் பார்த்து களைச்சுப் போனன்
**சிவா:**-ஏன் அண்ணை?
**அன்ரன:**-சமாதானம், பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் எண்டு ஏதாவது இருக்குமெண்டால் அந்தச் சொற்களையே காணேல்ல.



**சிவா:**-அண்ண எங்களுக்குள்ள, எங்கட வீட்டுக்குள்ள சொந்த பந்தங்களுக்க சமாதானம் இல்லை. அப்ப என்னெண்டு நாட்டில சமாதானம் வரும்.
**அன்ரன:**-அதுவும் சரிதான்.

இது தெருவோரத்தில் நடந்தவொரு சம்பாசனை. இது நாளாந்த வாழ்வின் அவலங்களினதும் பிரச்சினைகளினதும் பிரதி பலிப்புக்கள். வார்த்தை வேறு வாழ்க்கை வேறாக நாம வகுத்துக்கொண்ட வாழ்க்கை முறைகள். இதைத்தான் அன்று யூதர்களும் மிகவும் நுணுக்கமாக கடைப்பிடித்தார்கள். வாழ்க்கையும், வழிபாடும் வேறுபட்டுக் காணப்பட்டது. இதனால் தான் இயேசு,

'புறத்தேயிருந்து மனிதனுக்குள்ளே சென்று அவனை மாசுபடுத்தக் கூடியது ஒன்றும் இல்லை. மனிதனுள் இருந்து வருவதே அவனை மாசுபடுத்தும்' எனக் குறிப்பிடுகின்றார்.

கொலை, கொள்ளை, பேராசை, தீய எண்ணம், செருக்கு, மோகம், பொறாமை என்பன மனிதனின மனத்தின் வெளிப்பாடுகள். இதனால் சமாதானமும் அமைதியும் இன்றி மனிதன் அலைபாயகிறான். மரபுகளையும், பழக்க வழக்கங்களையும்

## பரமபிதா காட்டியபாதை

கடுமையாக கடைப்பிடித்த யூதர்கள் இயேசுவையும், அவரது சீடர்களையும் கண்டித்து விமர்சித்தனர். ஆனால் இயேசுவோ இவற்றை அடியோடு தகர்த்தெறிந்து அன்புக்கு முதலிடம் கொடுககின்றார்.

மனிதனின் கடுமையான போக்குகளையும், மரபுகளையும், சட்டதிட்டங்களையும் விமர்சிக்கின்றார்.

எனது குலம், சாதி, பணம், பட்டம் பதவி என குறுகிய வட்டம் அமைத்து வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் சமாதானத்தையும், அமைதிய்யையும் பத்திரிகைகளில் தேடுவதுடன் அமைதி காண விளைகின்றோம். நாளாந்த வாழ்வில் உள்ள அமைதியின்றி குடும்ப உறவுகளில் பொது உறவுகளில் போட்டியும், பொறாமையும் காட்டிக் கொடுப்புக்களும் கொண்டு வாழ்கின்றோம்.

தன் உயர்ச்சிக்காகவும், தனது சுயநலப் போக்கிற்காகவும் அயலவரின் இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கும மனப்பான்மை ஏற்பட்டு விரகதியும், வெறுமையும் எம்மை ஆட்கொள்கின்றது. இதனால் மனிதப் பண்பு அற்றவர்களாக மாறி வருகின்றோம். இதைத்தான் நற்செய்தியாளர் மாறகுவும் இன்றைய வாசகத்தில் வற்புறுத்துகின்றார்.

ஒரு சிறைச்சாலையை ஒரு பெரியவர் தரிசித்துக்கொண்டு வந்தார். ஒருமுறை அவர் சிறைச்சாலையைத் தரிசிக்கும்போது 14வயதுச் சிறுவன் ஒரு மூலையில் முடங்கிக் கொண்டு படுத்திருந்தான். அவர் அவன் அருகில் சென்று மிக ஆதரவாக தோளில் தட்டி மிகவும் அன்பாக 'மகனே நீ ஏன் இங்கு வந்தாய்? எனக் கேட்டார். அவன் விம்மி விம்மி அழத்தொடங்கினான். பின்' ஐயா உங்களை முதலே நான் சந்தித்திருந்தால் இங்கு வந்திருக்கமாட்டேன் எனச் சொன்னான். இங்கு பெரியவரின் அன்பும் ஆதரவும் அந்தச் சிறுவனை ஒருநிமிடம் தடுமாற வைத்துவிட்டது. அவன் தன்னை, தன்னிலையை உணர்ந்து கொள்கிறான். இன்று அனபையும, ஆதரவையும், நல்ல வார்த்தைகளையும் கேட்டிராத உள்ளங்கள் ஏராளம். இதனால் சிறியோர்முதல் பெரியோர் வரை தடுமாறுகின்றனர். வாழ்க்கையை வெறுக்கின்றனர்.

எமது இனிமையான அன்பான வார்ததைகள் சில நேரங்களில் சில சந்தர்ப்பங்களில் சிலரை நல்வழிகக்கு கொண்டுவந்து விடுகின்றன. எனவே இறைவன் எமக்கு இலவசமாகத் தந்த நல்ல மனநிலைகளை நாம் எவ்வாறு பயன்படுத்தினோம். எமது வக்கிரததனமான வார்த்தைகளாலும, செயல்களாலும் மற்றவர்களின் வளர்ச்சிகளையும் தன்னம்பிக்கைகளையும் உடைத்த சந்தர்ப்பங்களைச் சிந்திப்போம் என் உள்ளத்தில் இருந்து வெளிவந்த வார்த்தைகளால் உள்ளம் உடைந்த உள்ளங்கள் எத்தனை? ஆறுதலஅடைந்து நம்பிக்கை பெற்ற உள்ளங்கள் எத்தனை? என சிந்திப்போம் செயற்படுவோம்.□

**பீற்றர்**

# தமிழ் இளைஞர்கள் லண்டனில் புரியும் அடாவடிகளைத் தடுக்க துப்பறியும் பிரிவு

(கொழும்பு)

கடந்த சனியன்று ரட்ணசேகரம் எனும் 18 வயது இளைஞர் லண்டனில் குத்திக் கொலைசெய்யப்பட்டதைத்தொடர்ந்து, இலங்கை இளைஞர் குழுக்களிடையே இடம்பெறும் வன்முறைகளைப் புலன் விசாரணை செய்வதற்கு விசேட பிரிவொன்றை ஸ்கொட்லன்ட் யார்ட் துப்பறியும் பிரிவு ஆரம்பித்துள்ளது.

வடமேற்கு லண்டனில் வெம்ளி என்னும் இடத்தில் இரு நண்பர்களுடன் காரில் இருந்தபோது ரட்ணசேகரம் இலங்கைத் தமிழர்களான 4பேர் கொண்ட குழுவினால் குத்திக் கொலைசெய்யப்பட்டதுடன், காரை சுத்தியல், கைக்கோடரி போன்ற ஆயுதங்களால் உடைத்து சேதப்படுத்திய பின் அக்குழுவினர் தப்பி ஓடிவிட்டனர்.

இது தொடர்பாக லண்டனில் மேற்கு, வடக்குப் பகுதிகளிலுள்ள தமிழர்களுடன் தொடர்புகொண்டு தகவலறியவும், இம்மாதிரியான கொலைகள் அதிகரிப்பதை கட்டுப்படுத்தவும் லண்டன் பொலிஸார் தனியான பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாண்டு ஏற்கனவே நான்கு இலங்கையர்கள் லண்டனில் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஜூன் 8ஆம் திகதி போத்தல்கள், வாள்கள் கொண்டு தாக்கிக் கொல்லப்பட்ட பிரதீபன் பாலசிங்கம்(வயது 23), கிழக்கு லண்டனில் கடத்திச்சென்று தாக்கப்பட்ட பின் இறந்த கிஷேக்குமார் பாலச்சந்திரன் (வயது 18), வடமேற்கு லண்டனில் கொல்லப்பட்ட சுபேந்தர் இராமச்சந்திரன் (வயது 18) ஆகியோர் இவர்களில் அடங்குகின்றனர்.

சுபேந்திரன் இராமச்சந்திரனின் கொலை தொடர்பில் நால்வர் குற்றவாளிகளாகக் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ரட்ணசேகரத்தின் கொலை ஒரு பழிவாங்கல் செயலா என்பதுபற்றி முதலில் தாம் ஆராய்ந்து வருவதாக துப்பறியும் இன்ஸ்பெக்டர் அன்டி றொவல் தெரிவித்துள்ளார்.

சில வன்முறைகள் நீண்டகாலக் குடும்பப் பகையினால் தூண்டப்படுகின்றன என்று இலங்கைத் தமிழர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ)

# எழுச்சிப் பேரவை அங்கத்தவர் சங்கமம்

(ஏழாலை)

சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை அங்கத்தவர்களின் சங்கமம் இன்று பி.ப 3.00 மணிக்கு க.அம்பிகைபாகன் தலைமையில் மானிப்பாய் பிரதேச கலாசார மண்டபத்திலும்,

கோப்பாய் பிரதேச தேசிய எழுசசிப் பேரவை அங்கத்தவர்களின் சங்கமம் இன்று பி.ப 4.00மணிக்கு நீர்வேலி அரசியற்துறை அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது. (உ-12)

# நாகபட்டினம் துறைமுகத்தில் இருந்தும் மீன்பிடிப் படகுகள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

தமிழ்நாடு நாகபட்டினம் துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் 61 மீன்பிடிப்படகுகள் இன்று திருகோணமலை துறைமுகத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது அங்கிருந்து அகதிகளாகச் சென்றோர் கொண்டுசென்ற மீன்பிடிப் படகுகளே கடந்த 13வருடங்களாக நாகபடடினம் துறைமுகத்தில் தடுத்து வைக்கபட்டுள்ளன.

இந்த 61மீன்பிடிப்படகுகளையும் இந்தியக் கடற்கடையினர் 12இழுவைப்படகுகள் மூலம் கொண்டுவந்து இலங்கைக் கடற்படையினரிடம் கையளிக்கவுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து நாகபட்டினம் சென்றுள்ள இப்படகுகளுக்குச் சொந்தக்காரர்களான 22மீனவர்களும், தமிழ்நாடு அகதி முகாமில் அகதிகளாகவுள்ள 30 திருமலை மீனவர்களும் இப்பட்குகளுடன் திரும்பிவரவுள்ளனர்.

நாகபட்டினத்தில் இருந்து எடுத்து வரப்படும் படகுகள்யாவும் திருகோணமலை துறைமுகத்தை நாளை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி)

# கொட்டடிப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட கொட்டடிப் பகுதியில் ஒதுக்குப்புறமாகவுள்ள சேரிகளில் சுகாதாரச் சீர்கேடு மலிந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மேற்படி சேரிகளில் வேறிடங்களிலிருந்து ஒழுங்கீனமான முறையில் திண்மக் கழிவுப்பொருட்கள் மற்றும் பல கழிவுகளும் கொண்டுவந்து கொட்டப்படுவதாகவும், இதனால் இப்பகுதி மக்கள் தொற்றுநோய் அபாயத்தை எதிர்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (உ-18)

# தினசரி தியானம்

## 'ஓம்' என்ற தியானம்

ஓம் என்று தியானம் செய்யுங்கள். தியான அறைக்குள் சென்று பத்மாசனம் அல்லது சித்தாசன நிலையில் உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டு தசைகளையும், நரம்புகளையும் இணக்கமான நிலையில் வைத்திருங்கள். பொருளாசை உடைய மனத்தை அமைதியாக இருக்கச் செய்யுங்கள். சுத்தபாவனத்துடன் 'ஓம்' எனும் மந்திரத்தைச் சொல்லுங்கள். பிரம்ம பாவனத்துடன் மேலும் மேலும் சொல்லுங்கள். இந்த பாவனை மிகவும் அவசியமானது.

**சுவாமி சிவானந்தர்**

# 35 சதவீத பாடசாலை மாணவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் கல்விபயிலும் 44இலட்சம் மாணவர்களில் 35சதவீதத்தினர் போஷாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

மெதுகிரிய விகாரகம கனிஷ்ட வித்தியாலய மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவா, ஒரு இலட்சத்து 61ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு அடுத்தவருடம் முதல் ஒருவேளை சத்துணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென உலக உணவுத்திட்டம் 2ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

கல்வி அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு, உலக உணவுத்திட்டம் ஆகியன இணைந்து இதனை நடைமுறைப்படுத்தவுள்ளன. (தி)

# இலங்கையில் முதல் முறையாக மாணவனுக்கு மரணதண்டனை

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக பாட்சாலை மாணவன் ஒருவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி-கிரியெல்ல மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இம் மாணவன் சக மாணவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இவர் மீதான விசாரணை கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற போது இரத்தினபுரி மேல் நீதி மன்றம் மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதி மேற்படி பாடசாலை மாணவியான லும்பினி இரேஷிகா (வயது-18) என்பவரை மரண தண்டனை விதிக்கப்பட்ட கே.என். எச். ஜயதிலக (வயது-20) என்பவர் பாடசாலையில் வைத்துக் கொடூரமாகக் குத்திக் கொலை செய்துள்ளார். (உ-8)

# தடுப்புக் காவலின் போது நிகழும் மரணத்திற்கு பொலிஸாரே பொறுப்பு

## உள்துறை அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவர் மரணமடைந்தால் அதற்கான முழுப்பொறுப்பினையும், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே ஏற்க வேண்டும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்று நிருபங்களை தான் சகல பொலிஸ் நிலையங்களுககும் அனுப்பி வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இச் சுற்று நிருபத்தின் பிரகாரம், பொலிஸாரினால் ஒருவர் கைது செய்யப்பட்ட பின், அவர் மரணம் அடைந்தாலும், அல்லது பாரிய அடிகாயங்களுக்கு உள்ளானாலும் அந் நபர் தடுத்து வைக்கப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், எதிராக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் மரணம் அடைந்தால் அந்தப் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பொலிஸாரினால் கைது செய்யப்படும் சந்தேக நபர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பொலிஸ் நிலையத்தினுடையது. எனவே, அவர்களுடைய பாதுகாப்பு விடயத்தில் பொலிஸ் அதிகாரிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா பொலிஸ் உயர் அதிகாரிக்கு வலியுறுத்திள்ளார் எனவும் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-10)

# மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கைச் சிறைச்சாலைகளில் இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப் பட்டிருப்பதற்கும். இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் துன்புறுத்தப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று தமிழகம் இராமேஸ்வரம் இறங்கு துறையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 36 படகுகளையும் சிறைகளில் வாடும் மீனவர்களையும் விடுவிக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)

# பிரதமர் ரணில் நியுயோர்க் பயணம்!

(கொழும்பு)

எதிர்வரும் 26 ஆம் திகதி ஐ.நா. தலைமைச்செயலகத்தில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கு கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க் பயணமாகவுள்ளதாக கொழும்பிலுள்ள ஐ.நா.சபை அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை எதிர்வரும் 22 ஆம்திகதி நடைபெறவுள்ள எயிட்ஸ் தொடர்பான விசேட நிகழ்வில் கலந்து கொள்ளும்படி ஜனாதிபதி குமாரதுங்கவிற்கு ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் அழைப்பு விடுத்துள்ளார் (இ).


# பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் ஆண்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

- ★தெல்லிப்பழை
- ★மருதனார்மடம்
- ★உரும்பிராய்
- ★கோண்டாவில்
- ★திருநெல்வேலி
- ★நல்லூர்
- ★கந்தர்மடம்
- ★அரியாலை
- ★நாயன்மார்கட்டு

இப்பதவிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தங்களது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், தொழில் புரியும் இடம் என்பன உள்ளடங்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை;

பிரதம ஆசிரியர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு இம் மாதம் 10-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


## அடைக்கல அன்னையின் திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய மரியன்னையின் 75வது ஆண்டு விழா திருப்பலி நாளை கிளிநொச்சி மறைக் கோட்ட குரு முதல்வரும் முன்னாள் பங்குத் தந்தையுமான அருட்திரு ஏ.பி.தேவசகாயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் அன்னையின் திருச்சொரூப தேர்ப்பவனியும் இடம்பெறும். (உ-7)

## பொ.ஐ.முன்னணி...

பிரதமர் அலுவலகம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கலாநிதி சரத் அமுனுகம குறிப்பிட்டுள்ளது போல் திருகோணமலை மாவட்டத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் புலிகளின் முகாம்கள் அமைக்கப்பட்டதற்கான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் பிரதமர் அலுவலகத்திற்குக் கிடைக்கவில்லை.

எனினும் இராணுவத்தினருக்குக் கிடைத்திருக்கக் கூடிய உறுதிப்படுத்தப்படாத தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய குற்றச்சாட்டுக்களை முப்படைத் தளபதிகளும் நிராகரித்துள்ளனர். இந்நிலையில் பாதுகாப்புப் படையினரால் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாருக்கு எவ்வாறு கிடைத்திருக்க முடியும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க கலாநிதி சரத் அமுனுகமவின் குற்றச்சாட்டை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரும் திட்டவட்டமாக மறுத்துள்ளார். குரங்குபாஞ்சான் முகாம பகுதியில் மீண்டும் ஒரு முகாமை விடுதலைப் புலிகள் அமைத்து வருவதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை அடுத்து அங்கு கண்காணிப்புக் குழு சென்று நிலைமைகளை ஆராய்ந்த போது அத்தகைய முகாம் எதுவும் அப்பகுதியில் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதாரமற்ற இக் குற்றச்சாட்டுகள் ஐக்கிய தேசிய முன்னணி அரசைப் பதவி கவிழ்ப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் முன் நடவடிக்கைகள் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## யாழில் தேசிய...

இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் ஸ்ரீலங்கா அரசு தேசிய விளையாட்டு விழாவை அவசர அவசரமாக ஏன் யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்பதைத் தான.

உலக ஒப்பனைக்காக ஸ்ரீலங்கா அரசு தமது வளங்கள் எல்லாவற்றையும் திரட்டி எல்லாத்துறைகளினூடாகவும் பாரிய ஊடுருவலைத் தாயகத்தில் நிகழ்த்துகின்றது.

உண்மையான புரிந்துணர்வையோ, சமாதானத்துக்கான முன்னெடுப்புக்களையோ செய்யாமல் எமது மக்களை அலகுகளாகப் பிரித்து அந்தத்துறையினரை தனிதனியாக வகைப்படுத்தி எமது மக்களுக்கு இருக்கும் சமூக, சமய, கலை, விளையாட்டு ஆர்வத்தை மிகலாவகமாகப் பயன்படுத்தி தமது இலக்கை எட்டுவதே நோக்கமாகும்.

விடுதலைக்காக எழுச்சி பெற்றிருக்கும் ஈழத் தமிழரின் தேசியத்தைத் துண்டு துண்டாகக் கூறுபோட்டு அதன் ஆணிவேரை ஆட்டங்காணச் செய்வது 'அரசின் சூழ்ச்சியாகும்.

ஆகவே உண்மையான சமாதானத்திற்கான சுமுகத் தீர்வும், பரஸ்பரம் புரிநதுணர்வுடன் வாழக்கூடிய சூழலும் எமது மண்ணில் ஏற்படுமானால் அடுத்த தேசிய விளையாட்டு விழாவை எங்கு நடத்தினாலும் நாம் அதற்கு இடைஞசலாக இருக்கமாட்டோம். இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (த-43)


THE ROYAL COLLEGE OF JAFFNA

சிறந்த ஆசிரியர்கள் சகல பாடங்கள் புதிய பதிவுக்கு தலைமை 'ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி 426(302) K.K.S Rd, Jaffna.

(7452)


# புலிகளின் மகளிர் படையணி விளையாட்டுப் போட்டி

## நிகழ்வில் கேணல் சூசை பங்குபற்றினார்

(கிளிநொச்சி)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முதலாவது பெண் மாவீரர் மாலதியின் நினைவு நாளையும் முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிப் போராளிகள் பங்குபற்றும் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பில் ஆரம்பமாகியுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து பெண் போராளிகளின் மரதன் ஓட்டப் போட்டி புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பமாகி. விசுவமடு றெட்பானா சந்தியை சென்றடைந்தது.

போட்டியில் சோதியா படையணியைச் சேர்ந்த இனியமொழி முதலாம் இடத்தையும் மாலதி படையணிச் சேர்ந்த குட்டியழகி 2ம் இடத்தையும் அன்பரசி படையணியைச் சேர்ந்த கனிக்கடல்3ஆம் இடத்தையும் பெற்றனர்.

நிகழ்வில் தளபதிகள் போராளிகள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (த-43)

# க.பொ.த சா/த பரீட்சை டிசெம்பர் முதலாம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன இப்பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஏ.எம். விஜயசிறி தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை தென் பகுதியில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக பிற்போடப்பட்டிருந்தது.

மேற்படி தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறும்.

அத்துடன் 3 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ள இப் புலமைப் பரிசில் பரீட்சையின் முடிவுகள் 40 தினங்களுக்குள் வெளியிடப்படும் எனத் தெரிவித்துள்ளார். (உ-18)

# ஐ.நா.செயலர் கொபி அனான் இலங்கை வருகிறார்

(கொழும்பு).

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபி அனான் மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளளார்.

அடுத்த மாதமளவில் அவர் இலங்கைக்கு வரவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எதிர்வரும் அக்ரோபர் மாதம் 10திகதி தொடக்கம் மூன்று நாட்கள் இவரின் இலங்கை விஜயம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களிற்கு முன் நடைபெறவிருந்த இவ் விஜயம் பின்னர் ஒத்திப்போடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதேவேளை செயலர் கொபி அனான் இவ்விஜயத்தின் போது யாழ்ப்பாணத்துக்கும் வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக அவரின் விஜய ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (இ)

### குரங்குபாஞ்சான் முகாம் சர்ச்சை

# விடுதலைப் புலிகளுடன் பேச கண்காணிப்புக்குழு முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் குரங்கு பாஞ்சான் முகாம் தொடர்பாக மீண்டுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளுடன் நடத்துவதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுத்துவருகிறது.

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நடத்தவிருக்கும் இப்பேச்சுவார்த்தையை அடுத்த வாரமளவில் நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் சம்மதம் கோரப்பட்டிருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று வன்னி சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குரங்கு பாஞ்சான் முகாம் விவகாரம் தொடர்பாகத் திருகோணமலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை பலனளிக்காமையினாலேயே இப்பேச்சுவார்த்தைக்கு ஒழுங்கு கள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## ஸ்ரீ.சு.கட்சி...

ஐக்கிய தேசிய முன்னணி அரசை தோல்வியடையச் செய்வதற்கு நாம் எமக்கிடையே உள்ள வேறுபாடுகளை மறந்து இணைந்து போட்டியிடவுள்ளோம். அடுத்த தேர்தலில் ஜே.வி.பியுடன் இணைந்து போட்டியிடுவோம் என்றும் கூறினார். (வ)


MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.